பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு
# The EELA NADU

மலர்: 19 ஆனி 15 றஜப் 11 இதழ்: 138
யாழ்ப்பாணம் புதன்கிழமை ௨௯-6-77

கடந்த நள்ளிரவு முதல் நடைபெறவிருந்த

## வேலைநிறுத்தத்தை நிறுத்திவைக்க முடிவு!
## வங்கி ஊழியர்சங்க செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

இன்று நள்ளிரவுமுதல் மேற்கொள்ளப்படவிருந்த வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தை நிறுத்திவைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர்சங்கப் பொதுச் செயலாளர் திரு. ரஞ்சித் பெர்ணண்டோ விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் கடிதம்

நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா வங்கி ஊழியர் விவகாரம் தொடர்பாக இலங்கை வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தற்போதுள்ள 'காபந்து' அரசாங்க நிதி அமைச்சரான தம்மால் தேசிய அரசபேரவை கலைக்கப்படுமுன் எடுக்கப்பட்டிருந்த எந்தப் பிரகடனத்திற்கும் புறம்பாக முரண்பட்டவகையில் நடந்துகொள்வதற்கில்லை என்று கூறியுள்ளார்.

அவ்வாறுதாம் நடந்து கொண்டால் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாகத் தாம் தகுதியற்ற விதத்தில் நடந்து கொண்ட

(8ம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர் பதவியேற்பு



## சிறப்புமிகு வைபவம்

## நாளைக்காலை நடக்கிறது

(நமது விசேஷ நிருபர்)

**புகழ்பூத்த தமிழகத்தின் புதிய முதலமைச்சராக, அ. இ. அ. தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி.இராமச்சந்திரன் நாளை வியாழக்கிழமை காலை பதவியேற்பார். பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை மரியாதை செலுத்தியபின் அவர் தமிழக தலைமைச் செயலகத்துள் நுழைவார். இந்த வைபவத்தை பல்லாயிரக்கணக்கான மக்களும் கண்டுகளிப்பதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

இம்மாதம் 12ம் திகதியும், 14ம் திகதியும் நடந்துமுடிந்த தமிழக சட்டசபைத்தேர்தலில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் பெரு வெற்றியீட்டியதைத் தொடர்ந்து, புதியஆட்சிபீடத்தைஅது நாளை வியாழக்கிழமை அலங்கரிக்கிறது. புதிய-தமிழக மந்திரி சபையின் விவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட போதிலும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியிடப்படவில்லை.

### எம். ஜி. ஆர். அதிர்ஷ்ட எண்

தமிழகத்தினை ஆளப்போகும் புதிய எம். ஜி. ஆர். ஆட்சியில், பத்துக்கும் சற்றுக் கூடுதலான அமைச்சர்கள் இடம் பெறுவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டபோதிலும் முதலில் ஒரு குறிப்பிட்ட-ஏழு அமைச்சர்களே நியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அ. இ. அ. தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு ஏழு என்ற இலக்கம் அதிர்ஷ்டமாக இருப்பதால். ஆரம்பத்தில் ஏழுபேரே அமைச்சரவையில் சேர்க்கப்படுவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர் இருமடங்கு பேர் புதிய அமைச்சரவையில் அங்கம் பெறுவார்கள் என்று அ இ அ தி மு கழகத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வியாழக்கிழமை காலை 9-15 மணிக்கு திரு. எம். ஜி. ஆரின் புதிய மந்திரிசபை ராஜாஜி மண்டபத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி முன்னிலையில் பதவி ஏற்கும்.

ராஜாஜி மண்டபத்ினுள் அமைப்பாளர்கள் மட்டுமே நுழையலாம்.

### கோட்டையில் எம் ஜி.ஆர்.

பதவி ஏற்றபின் திரு. எம். ஜி. ஆர். தமது அமைச்சர்களுடன் திறந்த ஜீப்பில் ஊர்வலமாக சென்று பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலையணிவிப்பார்.

பின்னர் அங்கு நடைபெறும் கூட்டத்தில் உரைநிகழ்த்துவார்.

இதனைத் தொடர்ந்து அவர் கோட்டைக்குச் சென்று முதலமைச்சர் பதவிப் பொறுப்பை ஏற்பார்.

### டெலிவிஷன் வசதி

திரு. எம். ஜி. ஆர். மந்திரி சபையின் பதவியேற்பைகண்டு இறும்பூதெய்திட வெளியூர்களில் இருந்தும் பெருந்தொகையானோர் சென்னை வருவரென எதிர்பார்க்கப்படுவதால் சகலரும் இவ்வைபவத்தை பார்க்கும் பொருட்டு டெலிவிஷன் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

## "தகராறு என்று கூறப்படுவது தவறானது"

சென்னை, ஜூன் 28

அ. இ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமது அமைச்சரவைப் பட்டியலை இன்னமும் இறுதியாக்கவில்லையென்றும் நாளை இப்பட்டியலை அவர் இறுதியாக்கி தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்ப்பதாகவும் அனைத்திந்திய அ. தி. மு. க. பிரசார செயலாளர் திரு. சோமசுந்தரம் இன்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

### தகராறு எதுவும் இல்லை

அமைச்சரவைப் பட்டியல்

(8-ம் பக்கம் பார்க்க)

# திடீர் ஆயுர்வேதக் கல்லூரி உதயம்!

யாழ்ப்பாணம், புதன்

யாழ். லங்காஆயுர்வேத கல்லூரி மாணவர்களும், விரிவுரையாளர்களும், கடந்த இரண்டுமாதகாலமாக நிர்வாகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம், சத்தியாக்கிரகம் ஒத்துழையாமை, உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்திய பின் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் புதிய ஆயுர்வேத கல்லூரி ஒன்றை உருவாக்கினார்கள்.

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில், பெரிய ஆஸ்பத்திரிக்குப் பின்னால் உள்ள மேல்மாடிக்கட்டிடத்தில் ஆரம்பித்த இக்கல்லூரிக்கு 'லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியும் சித்தகலாசாலையும்' என்று இதற்குப்பெயர் சூட்டியுள்ளார்கள்.

கல்லூரி ஸ்தாபக உறுப்பினரும் முன்னாள் அதிபருமான டாக்டர் ஆர். ஈ. ஜெயோரத்தினம் நேற்றுக்காலை 11 மணிக்கு, சம்பிரதாயப்படி இக்கல்லூரியை திறந்துவைத்தார்.

எண்பது மாணவ மாணவிகளும் விரிவுரையாளரான டாக்

[7ம் பக்கம் பார்க்க]

புங்குடுதீவில்

## துப்பாக்கி முனையில் 15,000 ரூபா கொள்ளை!

யாழ்ப்பாணம், செவ்.

துப்பாக்கிமுனையில் புங்குடுதீவிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர் கோஷ்டியினர் 15,000 ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

புங்குடுதீவு வல்லன் பகுதியில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

வீட்டின் சொந்தக்காரர்கள் வெளியில் சென்ற சமயம் வீட்

[7ம் பக்கம் பார்க்க]

## நயினை தேர்உற்சவம் இன்று

வண்ணார்பண்ணை, புதன்

இன்று நடைபெறும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர் உற்சவத்திற்கு நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் நேற்றுமுதல் நயினாதீவை வந்தடைந்தனர்.

குறிகாட்டுவான், இறுப்பிட்டி ஆகிய துறைமுகங்களில் யாத்திரிகர்கள் தங்கிச்

[7ம் பக்கம் பார்க்க]

# மடு உற்சவம்: விசேஷபஸ்சேவை

யாழ்ப்பாணம், புதன்

மடுத்திருப்பதி திருவிழா ஆரம்பமானதை முன்னிட்டு யாழ் கிறிஸ்தவ ஆலயங்களில் இருந்து யாத்திரிகர்கள் பெருமளவில் புறப்படத் தொடங்கியுள்ளனர்.

புனித. யுவானியார்கோவில் பாடகர் குழுப் பெண்களும் மடுத்திருவிழாவில் கலந்து கொள்ளும்பொருட்டு 1-ந்திகதி புறப்பட்டுச் செல்கின்றனர்.

மடுமாதா உற்சவத்தை முன்னிட்டு-மன்னார் யாழ்ப்பாண இ. போ. ச. டிப்போக்கள் விசேஷ சேவைகளை நடத்துகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுத் தொடக்கம் மடுப்பதிக்குக் காலையில் இருசேவைகள் விசேஷமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இவைதவிர வழமையான சேவைகளும் உண்டு. மேலும் யாத்திரிகர்களின் தொகைக்கேற்ப விசேஷ சேவைகளும் மேற்கொள்ளப்படலாம்என்றுயாழ். டிப்போவினர் தெரிவித்தனர்.

## இன்று யாழ். வளாகத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகத்தில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கில் 'கலாயோகி ஆனந்தகுமாரசாமியின் மூதாதையர்கள்' என்னும் பொருள் பற்றி திரு. ச. அம்பிகைபாகன் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பார். (உ)

லோகநாதன் இன்ஸிரியூட்
166, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
புதிய வகுப்புகள்
க. பொ. த. சாதாரணம், உயர்தரம்
(காலை, மாலை நேர வகுப்புகள்)
என். வி. ஜி. ஈ., எச். என். வி. ஈ.
(மாலை நேர வகுப்புகள்
G. A. Q. (சனி ஞாயிறு மட்டும்)
ஆங்கிலம் (Spoken English) மாலை
ஆரம்பம் 1-7-77
6556

# ஈழநாடு

# தேர்தல் போட்டி 77

**யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான சபைக்கு நிதி சேர்த்து உதவும் முகமாக 'ஈழநாடு' இப்போட்டியை நடத்துகின்றது.**

போட்டி நிபந்தனைகள்

1. 'ஈழநாடு' ஸ்தாபன இயக்குநர்கள், ஊழியர்கள் அவர்களின் குடும்பத்தினர் ஆகியவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைவரும் வயது வரம்பின்றி இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

2. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும் பிரவேசப்பத்திரங்களே போட்டியில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3. போட்டிக்கான பிரவேசக் கட்டணம் ரூ. 1/- ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் பிரவேசக்கட்டணம் ஒருரூபாய் வீதம் அனுப்பப்படல் வேண்டும். தபாற் கட்டளை அல்லது காசுக் கட்டளைகள்:-

வட இலங்கை புற்றுநோய்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்

என்ற பெயரில் எடுக்கப்பட்டு, பிரவேசப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எக்காரணம் கொண்டும் பிரவேசக்கட்டணம் ரொக்கமாக அனுப்பப்படலாகாது.

4. நிரப்பப்பட்ட பிரவேசப் பத்திரங்கள்;

பொது முகாமையாளர்,
'ஈழநாடு'
த. பெ. 49
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது மேற்கரையில் 'ஈழநாடு' தேர்தல் போட்டி 77' எனக் குறித்து 20-7-1977ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்கம் கீழ்க்கரையில் அனுப்புபவரின் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பதாக ஒரு வேட்பாளர் காலமானால் அவர்போட்டியிடும் தொகுதி இப் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுவிடும்.

6. இப் போட்டியில் ஐந்து கேள்விகள் அடங்கும். அவைகளுக்குப் பின்வரும் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கேள்வி | 1... | 25 பெயர்கள் 2 புள்ளிகள் | வீதம் 50 புள்ளிகள் |
| ,, | 2...... | ...... | 06 ,, |
| ,, | 3...... | ...... | 06 ,, |
| ,, | 4...... | ...... | 08 ,, |
| ,, | 5... | 15 பெயர்கள் 2 புள்ளிகள் வீதம் | 30 புள்ளிகள் |
| | | மொத்தம் | 100 ,, |

7. புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றிகள் நிர்ணயிக்கப்படும். முழுவதும் சரியான விடைகளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். பிழையான விடைகள் அதற்குரிய புள்ளிகளை இழந்துவிடும்.

8. வெற்றி பெறுவோருக்கு பின்வரும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:-

| | |
|---|---|
| 1ம் பரிசு | ரூ 1000 |
| 2ம் ,, | ரூ. 500 |
| 3ம் ,, | ரூ. 250 |

மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளருக்கு முதல் பரிசு வழங்கப்படும். இரண்டாவது மூன்றுவதாக அதிக புள்ளிகளைப் பெறும் போட்டியாளர்களுக்கு அந்த ஒழுங்கின்படி பரிசுகள் வழங்கப்படும். மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளர்கள் ஒருவருக்கு மேற்படின்- இருவராயின் திருவுளச்சீட்டின்படி முதல் இரண்டு பரிசுகளும் தீர்மானிக்கப்படும்; இருவருக்கு மேற்படின் முதல் மூன்று பரிசுகளும் திருவுளச்சீட்டின்படி தீர்மானிக்கப்படும். இரண்டாம், மூன்றும் பரிசுகள் விஷயத்திலும் இதே முறை கையாளப் படும்.

9. போட்டி முடிவுகள் 21-8-1977 'ஈழநாடு' வாரமலரில் வெளியிடப்படும். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் ஏற்பாடுகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

10. இப்போட்டியில் ''ஈழநாடு தேர்தல் போட்டி 77 நடுவர்குழு'' வின் தீர்ப்பே இறுதியானதாகவும் சட்டப்படி கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். இப் போட்டி முடிவுகள் தொடர்பாக போட்டியாளர்களுடனோ வேறு எவருடனுமோ எந்தக்காரணத்தின் நிமித்தமும் 'ஈழநாடு' எதுவித கடிதத் தொடர்புகளும் வைத்துக்கொள்ள மாட்டாது.

11. தெளிவின்றியும், கிறுக்கியும், வெட்டியும் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

# ''பணியைத் தொடர்வதற்கே தேர்தலில் நிற்கிறேன்''

### - குமாரசூரியர் கூறுகிறார்

கிளிநொச்சி, செவ்.

'கிளிநொச்சித் தொகுதியில் பெரும்பாலானவர்களின் வேண்டுகோளுக் கிணங்க உங்கள் தொகுதிக்கும், நாட்டிற்கும் எனது பணியை தொடர்ந்து மேற்கொள்ளும் நோக்குடன் நான் இத்தேர்தலில ஒரு தேசியக்கட்சியின் சார்பில் உங்கள் தொகுதியில் வேட்பாளராக நிற்கிறேன்.'

அமைச்சர் திரு செ குமாரசூரியர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மக்கள் பணியே மகேசன் பணியென நான் சகல வழிகளிலும் என்னை அர்ப்பணித்து சேவையாற்றி வந்தமையை நீங்கள் எவரும் மறக்கமாட்டீர்கள் என்று கூறியுள்ள அவர் இப்பணியை மேலும் தொடர்ந்து மேற்கொண்டு உங்களுக்கு உதவியும் உறுதணையும் அளிப்பதே எனது ஒரேஒரு குறிக்கோளும்; ஆசையும் இலட்சியமுமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாட்டாளி மக்களும், விவசாயிகளும் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து விறுநடைபோடுவது இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில்தான் என்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் நன்குணர்வீர்கள். முதலாளித்துவம் ஒழிந்தது என்று கூறக்கூடிய அளவிற்கு நாம் இன்னமும் தொடங்கிய பணியினை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

கிராமிய பொருளாதார வளத்தினை உருவாக்கவும், இறைமைஉள்ள தன்னாட்சியின்கீழ் ஒன்றுபடவும் சோஷலிஸ சமுதாயம் மலரவும் பாட்டாளிவர்க்கம் உயரவும் மக்கள் சக்தி ஓங்கவும், தேசியக்கட்சியின்கீழ் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணவும், மக்களாகிய நீங்கள்வெற்றிப்பாதையில் செல்லவும் எனது கரத்தினை உயர்த்தி உங்கள் வெற்றியை நிர்ணயுங்கள் நீங்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு காக்கும் கரத்திற்கு வாக்குகளை அளியுங்கள். இவ்வாறு அவ் அறிக்கையில் அமைச்சர்மேலும் தெரிவித்துள்ளார்.

# ''ஒற்றுமையின் பலம் காட்டும் தேர்தல் இது''

### —வி.என். நவரத்தினம்

சாவகச்சேரி, செவ்

'வாக்காளர்களாகிய நீங்கள் என்ன நோக்கத்திற்காக எம்மைத் தெரிந்தனுப்புகின்றீர்களோ அதை நிறைவேற்ற நாம்முயற்சிப்போம். எதிர்வரும் தேர்தல் குடியரசு இலங்கையின் முதல்தேர்தலாகும். இத்தேர்தலில் நாம் எம்மை ஆளவேண்டியவர்களா? அல்லது பிறரால் ஆளப்பட்டு அடிமைகளாவதா என்பதை தீர்மானிக்கவேண்டும். எம்மை நாம் ஆளவேண்டுமானல் கூட்டணி அபேட்சகர்களை ஆதரியுங்கள்.'

கச்சாய்சந்திக் கருகாமையில் நடைபெற்ற கூட்டணித்தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது சாவகச்சேரி கூட்டணி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம்மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஐ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திரு. வி. என். நவரத்தினம் மேலும் பேசும்போது கூறியதாவது: ''இரு கட்சிகள் ஒன்றுபட்டன. இந்த ஒற்றுமையின் பலம் காட்டும் தேர்தலாக இது அமையவேண்டும்'' 'திரு. வயிரவி கந்தையா பேசும்போது தமிழினம் விடுதலை பெற உழைக்கும் இயக்கம் தானகூட்டணி'' என்ருர்.

திருவாளர்கள் க. குமாரசாமி, திரு ம. நகுலேஸ்வரன் உட்படப் பலர்பேசினர். (ச)

# ''தென்மராட்சி கிழக்கிற்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பேன்''

### —வி குமாரசுவாமி

யாழ்ப்பாணம், புதன்

'நான் தேசிய அரசுப்பேரவை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டால் தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கு 3 மாத காலத்திற்குள் மின்சாரம் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன்'.

வரணி மாசேரியில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய சாவகச்சேரித் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ்வேட்பாளர் திரு. வி. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கே. ஆறுமுகம் தலைமையில்நடந்தஇக்கூடடத்தில் திரு. வி. குமாரசாமி மேலும் கூறியதாவது: 'கடந்த 20 வருடங்களாக தென்மராட்சி கிழக்குப் பகுதியில் எவ்வித அபிவிருத்தியும் இடம்பெறவில்லை. நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் மின்சாரவசதி கிடைத்துள்ளது. ஆனல் இப்பகுதி மக்கள் மின்சாரம் பெருமல் கஷ்டப்படுகிருர்கள். இப்பகுதி மக்களுக்கு 3 மாத காலத்தில் மின்சாரம் பெற்றுக்கொடுப்பேன்.

'சிறுபான்மைத் தமிழர்களுக்குக்காணிபெற்றுக் கொடுக்கவும், படித்த வாலிபர்களுக்கு குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்பேன்'.

திருவாளர்கள் ஏ. தில்லைநாதன், வீ. பரமசாமி, வி. பரராஜா ஆகியோரும் பேசினர்கள்.

இதேதினம் வரணிவடக்கிலும் திரு. வி. குமாரசுவாமியை ஆதரித்து திரு வி. சதானந்தன் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. (சு)

# ''தமிழரின் பிரச்னைகளுக்கு யூ. என். பி. தீர்வுகாணும்''

யாழ்ப்பாணம், புதன்

'தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள கல்வி, குடியேற்றம், மொழி, உத்தியோகம் போன்ற பிரச்னைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியே தீர்வுகாணும்'.

கோப்பாய்ச்சந்தியில், ஐக்கிய தேசியக்கட்சிக் கிளைக் காரியாலயத்தைத் திறந்துவைத்த கோப்பாய்த் தொகுதி ஐ. தே. க. வேட்பாளர் திரு. சு. ஜெகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஈ. சிவநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அ. ஜெகநாதன் மேலும் கூறியதாவது: 'கடந்த7 ஆண்டுகளாகமக்கள்பட்ட துன்பத்தை ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைக்கும். பொருட்களின் விலைவாசியைக் குறைத்து, ஏழைமக்களின் துயர் துடைப்போம்'.

திருவாளர்கள் வி. சாமிநாதன், வி. இராஜேந்திரம், கே. தனபாலசிங்கம் ஆகியோரும் பேசினர்கள். (இ)

## வரி விளம்பரம்


### கல்வி

காலை 9 மணி தொடக்கம் பேசப்படிக்கும் ஆங்கிலமும், (Spoken English) 1977 மார்கழியில் நடைபெறும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்கான தையல் வேலை, சுகாதாரவியல், மனையியல் என்பனவும் கற்பிக்கப்படுகின்றன. கில்னர் கல்வி நிலையம், 4?6, K. K. S. ரோட், வண்ணார் பண்ணை. 6555

### தேவை

நெசவில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. அரசாங்க சம்பள நிர்ணயப்படி சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். நக்கிரன் நெசவகம், சிவன்வீதி, திருநெல்வேலி. 6557


# ரோட்டரி மாதர் கழகம்

## சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ரோட்டரி மாதர் கழகம் அண்மையில் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு:-

1-ம் பரிசு பி. அகிலா-கொடிகாமம், 2-ம் பரிசு ரி. சுதர்மா, 3 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 3-ம் பரிசு ஜே. பீளாக் சுன்னுகம்.

ஆறுதல் பரிசுகள்: கே. குலவீரசிங்கம், 308, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பி. தேவராஜா, புலோலி வீதி, யாழ்ப்பாணம். எஸ். ஏ. தர்மலிங்கம், அரியாலை, யாழ்ப்பாணம். கஜனி துரைரத்தினம், ராஜலிங்கம் ஒழுங்கை, மானிப்பாய் ஏ. வைத்திலிங்கம், 10, உருத்திரபுரம், டிநியூ சொழும்பு ஸ்டோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். வி கந்தராஜா, கேநண்டாவில் மேற்கு, கோண்டாவில். ஜே வி. ரதி, 7, கோயில் வீதி, யாழ்ப்பாணம். ஆர். மகேந்திரன், வல்லை நெசவு ஆலை, உடுப்பிட்டி. எஸ். சுப்பிரமணியம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். நிமால் பெரேரா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். பி. ரஞ்சன், ரம்பைக்குளம், வவுனியா. செல்வி கந்தையா, மீசாலை வடக்கு. என். நல்லதம்பி, கனகசபை வீதி, மானிப்பாய், ஜே. ஏ. ராஜகுலசேகரன், சென். ஆன்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# 'ரோட்டரி' செய்தி

25- 6- 77 சனிக்கிழமை வெளியான 'ஈழநாடு' தினசரியில் 6-ம் பக்கம் வெளியான 'ரோட்டரி மாதர் கழகம்' தொடர்பான படத்தின் அடிக்குறிப்பில் போல் ராசநாயகம் என்றிருப்பது தவருகும். படத்தில் மற்றவர்களுடன் காணப்படுபவர் மகாராஜா ஸ்தாபன வட்பிரதேச முகாமையாளர் திரு. எஸ். ராமநாதன் ஆவார். (—ஆர்)

# அன்பளிப்பு

சுழிபுரம், செவ்.

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் சிங்கப்பூரிலிருந்து அண்மையில் இங்கு வந்தவருமான திரு. ஆ. இராமமூர்த்தி பண்ணாகம் ஸ்ரீ முருகன் சன சமூக சேவா வாலிபர் சங்கம் ஆரம்பிக்க இருக்கும் புதிய நூல் நிலையத்திற்கு ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்துள்ளார்.

சங்கத் தலைவர் திரு. ச. சிவராஜன் தலைமையில் மேற்படி சங்க மண்டபத்தில் திரு. இராமமூர்த்திக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வைபவம் ஒன்று நேற்று நடைபெற்றது. (இ)

### ஜனாதிபதி தேர்தல்

# ஜனதா - எதிர்க்கட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை

## ஜெகஜீவனும் போட்டியிடலாம்

புதுடில்லி, ஜூன் 28

இந்திய ஜனாதிபதியாக பொதுவான ஒருவரை ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவதற்கான முயற்சிகளை ஜனதா கட்சி இப்போது மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஜனதா கட்சி எதிர்க்கட்சிகளுடன் மேற்கொண்டுவருகின்றது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஸ்ரீநகரில் கூறினார்.

இன்னும் ஒரு சில தினங்களில் இவ்விவகாரம் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவு ஏற்படும் என்றும், ஜனாதிபதி பதவிக்குப் போட்டி ஒன்று ஏற்படும் பட்சத்தில் அரசு ஒரு வேட்பாளரை நியமிக்கும் என்றும் திரு. தேசாய் கூறினார்.

ஜனாதிபதியாக லோகசபையின் சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டியே ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படும் அதேவேளையில், பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் திரு. ஜெகஜீவன் ராமும் இப்பதவிக்குப் போட்டியிடுவாரென அரசியல் வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியரல்லாத பாடசாலை ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர். எதிர்வரும் 12ம் திகதி இவர்கள் அடையாளவேலைநிறுத்தத்தில் இறங்குவதென்று முடிவுசெய்துள்ளனர்.

அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளையும் அ. இ. அ. பாடசாலை, கல்விநிறுவனங்கள் சங்க யாழ் கிளையும் இம்மாதம் 26ம் திகதி யாழ். மத்திய கல்லூரியில்கூடி இம்முடிவை ஏகமனதாக எடுத்தன.

எல். பி. டி. சில்வா சம்பளக் கமிஷன் அறிக்கையை நடைமுறைப் படுத்தாததைக் கண்டித்தும், கடன் வழங்கு சபைக்கு அரசாங்கம் வழங்கிய லட்சக்கணக்கான ரூபாய்களை ஆசிரியர்கள் உட்பட எவருமே பெறமுடியாமைக்கு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள நிர்வாகமே பொறுப்பு என்று ஊழியர்கள் கருதுவதாலும், 7 ஆண்டுகளாகியும் பொதுச்சேவைப் பணத்தை திருப்பித்தர நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும் இத்துடன் இன்னும் பத்துக்கோரிக்கைகளையும் சேர்த்து அ. பொ. சே. தொ. ச. செயலாளர் திரு. க. நவரத்தினம் பிரேரித்தார். ஏகமனதாக இக்கோரிக்கைகள் செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் திரு. க. நவரத்தினம், வேலைநிறுத்தம் மூலமே நமது கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இக்காலகட்டத்தில் மாற்றுவழி எதுவுமே இல்லை என்றும் ஊழியர்களது கோரிக்கைகளுக்கு ஆதரவாக ஆசிரியத் தொழிற் சங்கங்களின் ஆதரவையும் தாம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். [ ]

# இந்திராவின் பாதுகாப்புக்கு 18 லட்சம் ரூபா

## பிரதமர் தேசாய் தகவல்

புதுடில்லி, ஜூன் 28

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது பாதுகாப்புக்காக மட்டும் 6 ஆண்டுகளில் 18 லட்சத்து 13 ஆயிரம் ரூபா அரசாங்கப் பணத்தில் செலவிட்டுள்ளார். பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இத்தகவலை லோக சபையில்தெரிவித்தார்.

தமக்கு வரும் ஆபத்துக்களை முன்கூட்டியே அறிவதற்காக பலலட்சம் ரூபா பெறுமதியான பாதுகாப்புக் கருவிகளை திருமதி இந்திராகாந்தி தமது வீட்டில் வைத்திருந்தார் என்றும் திரு. தேசாய் கூறினார்.

தமக்குவரும் கடிதங்களில் வெடிகுண்டுகள்மறைத்துவைத்திருக்கின்றனவாவென அறியும் கருவிகள் மின்சார அபாய அறிவிப்புமணி ஆகிய நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்படும் கருவிகளை அரசாங்க செலவிலேயே திருமதி காந்தி பயன்படுத்தியுள்ளார் என்றும் அவர் கூறினார். (கெ-இ)

## அமைச்சர்கள் இவ்வீடுகளில் தங்கமறுப்பு

புதுடில்லி, ஜூன். 28

இந்திரா அரசின் அமைச்சர்கள் குடியிருந்த வீடுகளில் குடியேற ஜனதா அமைச்சர்கள் மறுத்துள்ளனர். இவர்களில் 2 பேர் மட்டுமே இப்பங்களாவில் குடியேறியுள்ளனர். இத்தகவலை வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. சிக்கந்தர்பக்த் தெரிவித்தார்.

ஜனதா அமைச்சரவை தீர்மானப்படி சிறிய பங்களாக்களில் குடியேறுவதென்ற முடிவிற்கமையவே இவர்கள்செயல்படவுள்ளனர். (கெ-இ)

## சந்திரோதயாவில் மணிவாசகர் விழா

உரும்பராய், செவ்வாய்

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை மண்டபத்தில் மாணிக்கவாசகர் குருபூசை நடாத்தினர். கூட்டுப்பிரார்த்தனையுடன் தித்திக்கும் திருவாசகம் தந்த மணிவாசகன் வரலாற்றை ஒன்பது மாணவர்கள் பேசியும் பாடியும் சபையைச் சிறப்பித்தனர். பாடசாலை அதிபர் திரு. ப. சிவசுப்பிரமணியம் மேற்பார்வையில் விழா நடைபெற்றது. (அ)

### மெய்கண்டானில்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்

[7ம் பக்கம் பார்க்க]

# ஆட்சி அமைக்க தம்மை அழைக்குமாறு கோரிக்கை

## பாண்டிச்சேரி இராமசாமி கவர்னருக்கு கடிதம்

சென்னை, ஜூன் 28

பாண்டிச் சேரியில் தமது கட்சிக்குப்பெரிய பலம் இருப்பதாகவும் அங்கு அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தம்மை அழைக்குமாறும் அ.இ.அ.தி.மு.க பாண்டிச்சேரி தலைவர் திரு. எஸ். ராமசாமி, லெப்டினன்ட் கவர்னர் திரு. குல்கர்ணிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

30 பேர் கொண்ட சட்ட சபையில் அ இ அ தி மு க 14 ஸ்தாபனங்களைக் கைப்பற்றி ஒரு சுயேச்சை உறுப்பினருடன் இணைந்து தமது கட்சிக்கு 15 ஸ்தானங்கள் என்று கூறியிருந்த வேளையில் கடந்த ஞாயிறன்று அக்கட்சியிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் விலகியதை அடுத்து அவர்களின் பலம் 13 ஆகக் குறைந்துள்ளது.

இங்கு குறைந்தது 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சியே ஆட்சி அமைக்க முடியும் என்றும் அ இ அ தி மு க 15 உறுப்பினர்களைக் கொண்ட தமது பலத்தை உடன் நிரூபிக்கத்தவறின் மத்திய அரசின் அனுமதியுடன் மாற்று நடவடிக்கையில் ஈடுபடவேண்டி வரும் என்றும் கவர்னர் தெரிவித்தார்.

### தி. மு. க. ஆதரவளிக்காது

பாண்டிச்சேரியில்எக்காரணம் கொண்டும் எக்கட்சியுடனும் தி மு க கூட்டணி அமைத்துக் கொள்ளாது என்று பாண்டிச்சேரி தி மு க அமைப்பாளர் திரு. சண்முகம் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரியில் தி மு க மூன்று தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியிருந்தது. (இ)

## ஆகஸ்ட் 6-ல் ஜனாதிபதி தேர்தல்

புதுடில்லி, ஜூன் 28

இந்தியஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது. (இ)

## 'இராமச்சந்திரனை அமைச்சரவையிலிருந்து விலக்குங்கள்'

கோவை, ஜூன் 26

மத்திய எரிபொருள் அமைச்சர் திரு.பா. இராமச்சந்திரனை பதவியிலிருந்து விலக்கிக் கட்சியைப் பலப்படுத்துமாறு கோவைகிழக்கு சட்டமன்றத் தொண்டர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி தொண்டர்சபை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் இதுதொடர்பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. கட்சியைப் பலப்படுத்தாவிடில்மீண்டும்தோல்வியையே சந்திக்கவேண்டிவருமென அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கெ-இ)

### கொடுங்கோலரசாக

# மாறுவதைத் தடுக்க அரசியல் சாஸனத்தில் திருத்தம்

### --மொரார்ஜி அறிவிப்பு

புதுடில்லி, ஜூன். 28

ஆட்சியாளர்கள் எவரும் கொடுங்கோலராக மாறுவதைத் தடுக்க அரசியல்சாசனத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

பத்திரிகைத்துறை, நீதித்துறை ஆகியவற்றின்சுதந்திரம் முன்னர்போல் என்றுமே பறிக்கப்படமாட்டாது.

நாம் காந்திவழிநின்றுஆட்சி செய்ய என்றே தீர்மானித்து விட்டோம்.

நெருக்கடி நிலையின் போது இருந்த ஒழுங்கு இப்போது குலைந்துவிட்டதென்று கூறுகிறார்கள். நாம் நிர்ப்பந்தத்தினாலும் கொடுங்கோன்மையினாலும் ஒழுங்கை நிலைநாட்ட விரும்பவில்லை மக்கள் தாங்களாகவே ஒழுங்கை கடைப்பிடிக்கவேண்டும். (இ)

## 'தேர்தல் நடந்தேதீரும்'

புதுடில்லி, ஜூன் 28

ஜம்மு-காஷ்மீரில் சட்டமும் ஒழுங்கும் சீராக இருப்பதால் தேர்தல் அங்கு ஒத்திவைக்கப்படமாட்டாது என்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இன்று ஸ்ரீநகர் புறப்படுமுன் தெரிவித்தார். (உ)

## அறுவைச் சிகிச்சைக்கு 207 பேர் பலி


புதுடில்லி, ஜூன், 28

75ம் ஆண்டு ஜூலைமாதத்திலிருந்து 77 மார்ச்வரை நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட 1,03,68,777 பேரில் 207பேர் பரிதாபமாக மாண்டனர்.

இத் தகவலை நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ராஜ் நாராயண் வெளியிட்டார்.

"அமைச்சுகளிலிருந்து, பல்வேறு துறைகளிலிருந்தும் இதுவரை கிடைத்த தகவலின்படி குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள மறுத்த மத்திய அரசு ஊழியர்களின் கட்டாய ஓய்வு சம்பள உயர்வு மறுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (கெ-இ)


உங்கள் விவசாய பயிர்களை பாதுகாத்து தீங்கிழைக்கும் பூச்சி பொடுக்களை இல்லாதொழிப்பது......



# பக்ஸ்

அல்லும் பகலும் அயராதுழைத்து நீங்கள் உண்டு பண்ணிய விவசாயப் பயிர்களிலிருந்து மேலான சிறந்த பயன்பெற அழிவுண்டாக்கும் பூச்சி புழுக்களிலிருந்து அவற்றைப் பாதுகாருங்கள்.

மிளகாய்ச் செடிச் சுருள், அவரை, ஈரவெங்காயம், புகையிலை, காய்கறி, அன்னுசி முதலியவற்றிலிருந்து சிறந்த வருவாயைப் பெற பாவியுங்கள் சர்வதேச புகழ்பெற்ற — பக்ஸ்

சர்வதேச செவ்ரேன் கம்பெனியின் இரசாயனத் தயாரிப்பு 'பக்ஸ் 300'

உற்பத்தியாளர்: 'மொனிடர் 600'

ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீல்ட்

(கொழும்பு)

டார்லி ரோட், கொழும்பு —10.

மணிவாக்கு

கடவுளை எப்பெயர் கொண்டழைத்தாலும், அவரிடம் கடவுளின் குணங்கள் இருக்கும் போது யாம் அவரை வணங்க வேண்டும். — காந்திமகான்.

ஈழநாடு
THE EELANAADU

# ஓர் அநீதி

இலங்கைக் கல்விப் பகுதியில் கடமையாற்றும் 12 வித்தியாதிபதிகளில் ஒரே ஒருவர்தான் இந்து என்றும் அந்த ஒருவரான லட்சுமண அய்யர் அவர்களும் ஓய்வு பெற்றுவிட்டதால், இப்போது ஓர் இந்துவும்கூட வித்தியாதிபதியாக இல்லை என்றும் இது இந்து சமூகத்துக்குச் செய்யப்பெற்றுள்ள ஓர் அநீதி என்றும் ஓர் அன்பர் ஏமாற்றத்துடன் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்நாட்டில் பௌத்தர்களுக்கு அடுத்தபடியாக இந்து சமூகத்தவரே இரண்டாவது பெரிய சமூகத்தாராக உள்ளனர். கல்விப் பகுதியில் 12 வித்தியாதிபதிகளில் ஒரே ஒருவரே இந்து கலாசாரத்தின் சார்பாக வித்தியாதிபதியாக இருந்துவந்தது மிகவும் குறைவாகும். அந்த ஒருவரும்கூட இப்போது இல்லாது போவதாயின் இந்நாட்டில் இந்து சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு இடம் இல்லாது போவதுடன் நிலைமை மேலும் மோசமடையக்கூடும்.

பல வித்தியாதிபதிகளையும் எந்த அடிப்படைக் கொள்கை மீது அரசு நியமிக்கின்றதென்பது தெரியவில்லை.

சமய கலாச்சார அடிப்படையில் நியமனம் இருப்பின் இரண்டாவது பெரிய சமூகத்தவருக்காகஇரண்டல்லது மூன்று வித்தியாதிபதிகளாவது இருக்கவேண்டும். இந்து சமூகத்துக்கு இந்நாட்டில் போதிய செல்வாக்கு இருப்பதாயின் இன்று இப்பெரிய குறை நீடித்திருக்க முடியாது.

திரு. அய்யர் அவர்கள் தமது பல்வேறு கடமைகளையும் திறம்படச் செய்து வந்ததாக பல பத்திரிகைகளிலும் பாராட்டுச்செய்திகள் வெளியாகின்றன. அவரது உத்தியோக காலத்தை அவரது மேலான சேவையை முன்னிட்டு, நீடித்திருக்கலாம். இந்து சமூகக் கல்விக்குச் செய்யப்பட்டுவிட்ட இப்பெரியகுறை சீக்கிரத்தில் நீக்கப்படவேண்டும். பார்லிமென்ட் சபையும் கலைக்கப்பட்டுள்ள நிலையில், இதைப்பற்றி யார் கவனிக்கப்போகின்றார்கள்?

இந்து சமூகத்தின் நன்மைக்காக இந்து மாமன்றம் சைவ பரிபாலன சபை உள்ளிட்டு பல அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள் உள்ளன. தங்கள் சமூகத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியைப்பற்றி ஜனாதிபதி அவர்களுக்கு, அவர்கள் தக்கபடி முறைப்பாடு செய்தால் இந்தக்குறை நீக்கப்பட ஏதாவது வழிவகைகள் செய்யப்படக்கூடும். பேசாமல் வாளாக இருந்துவிட்டால், இந்த அவலநிலை நீடித்து, இந்து சமூகத்தவரின் கல்விநிலை மேலும் மோசமாகக்கூடும்.

இந்நாட்டின் இரண்டாவது பெரிய சமூகத்தவரான இந்துக்களுக்காக அரசு நல்ல காரியங்களைச்செய்து வந்துள்ளது. அப்படி இருக்க இந்த அநீதி இப்போது ஏற்பட என்ன காரணம்? இதைக்குறித்து உடன் தக்கபடி முறைப்பாடு செய்தால்தான் இனியும் இவ்வித குறை ஏற்படாமலும் இந்து சமூகத்தவருக்கு உரிய நியாயம் கிடைத்து, இந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாதுகாக்கப்படமுடியும்.

# நயினை நாகபூஷணி

## இன்று தேர்த்திருவிழா

கண. ஜீவகாருண்யம்

உலகத்திலே சக்தி வழிபாடுதான் முதன் முதலில் தோன்றியது, என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஔவையார்கூட ''அன்னையும் பிதாவும்முன்னறிதெய்வம்'' என்றே கூறியுள்ளார். ''சக்தி இருந்தால் செய் அல்லது சிவனே என்று இரு'' என்று வழங்கும் பழமொழியும் இதையே குறிக்கின்றது.

கருணைக்கடலான அம்பிகைதான் சிவனேயென்று இருக்கும் சிவனுக்கு உலகத்தின் கஷ்டங்கள் - துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்பவள். இதனால்தான் அம்பாளுக்கு ''பவதாரிணி - புவனேஸ்வரி'' என்ற பெயர்கள் ஏற்பட்டன. நோய்களில் இருந்து பக்தர்களைக் காப்பவளும்அம்பிகையே.

இத்தகைய கருணைத்தெய்வம் - இலங்கைத் தீவின வடபால் அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றாகிய நயினாதீவில் ஸ்ரீநாகபூஜணி அம்மன் என்ற திருநாமத்தில் திருநாமத்தில் அழகு பொலியும் திருமுகத்துடன் தன்னைநாடி கடல்கடந்து வரும் பக்தர்களின் குறைகளைப் போக்கி அருள்பாலிக்கிறாள்.

இக்கோவில் கர்ப்பக்கிரகத்தில் இயற்கையாக எழுந்த மூலவிக்கிரகமாகிய நாகவிக்கிரகம் காந்தாரகாலத்துக்கும்முற்பட்டதாக ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறியுள்ளார்கள். இவ்விக்கிரகத்தை நாகபாம்பொன்று முற்காலத்தில் வழிபட்டதாகவும், நயினாதீவிற்கு அண்மையிலமைந்துள்ள புளியந்தீவு என்ற கடலாற் சூழப்பட்ட தீவிலிருந்து பூக்கள் கொண்டுவந்து அம்பாம்பு வழிபட்டதாகவும் அப்படி நடந்த காலத்தில் ஒருநாள் கருடன் ஒன்று கடலின் மத்தியில் பாம்பைப் போகவிடாமல் தடுத்து சண்டையிட்டதாகவும் அப்போது வணிகநோக்கமாக தென்னிந்தியாவிலிருந்து கப்பலில் வந்த மாநாயக்கன் என்ற வணிகன் கண்டு பாம்பைவிடும்படி கூறியதாகவும், தான் விடுவதாக இருந்தால் கப்பலில் கொண்டுவந்த பொருள்கள் முழுவதையும் கோயிலுக்குக் கொடுக்கும்படி கூறவும் வணிகனும் ஒப்புக்கொண்டு கப்பலில்வந்த திரவியங்களையெல்லாம் கோயிலுக்குக் கொடுத்து கோயிலையும் புனருத்தாரணம் செய்வதாகவும் சொன்னான். அதன்பின் பாம்பு தன்வழியே சென்றதாம்.

மாநாயக்கன் என்ற வணிகனே நயினாபட்டர் என்ற அந்தணரைக்கொண்டு கோயில் பூசைகளைச் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. பாம்புசுற்றிக்கல்லும் கருடன்சுற்றிக் கல்லும் கடலால் அழிக்கப்படாமல் இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. நயினாபட்டர் பூசைசெய்து வழிபட்டபடியால்தான் அத்தீவிற்கு நயினாதீவு என்றபெயர் ஏற்பட்டது.

சென்ற (16-6-77) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நாகபூசணி அம்பாள்கோயில் திருவிழாக்கள் 1-7-77 அன்று நடைபெறும் பூங்காவனத் திருவிழாவுடன் முடிவடைகின்றன. அம்பாள் கோயில் திருவிழா நாட்களில் இத்தீவு 'இந்திரவிழா' நடைபெறும் தீவுபோல் காட்சியளிக்கும்.

இன்று நடைபெறவிருக்கும் தேர்த்திருவிழாக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். தன்னைக் காணவேண்டும் - கண்டு அழுது தொழுது வழிபடவேண்டும் என்று கடல் கடந்துவரும் அடியவர்களுக்கு அருள்பாலிக்க, அம்பாள்தேரில் புதுப்பொலிவுடன், காட்சி அளிக்கும் காட்சி வேறு எங்குமே காணமுடியாதது. முற்றிலும் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள தேரில் மணிகள் ஒலிக்க அம்பாள் தேரில் ஆடிவரும் காட்சி கண்கொளாக் காட்சியாகும்.

## அழகமைந்த தேரினிலே!

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
    உனையடைய வருமடியார்க் குற்றதுணை யாகி
நிலவுபுகழ் வளர்நயினா தீவிலமர் தாயே
    நின்பெருமை யாரறிவர் நிமலனவன் வாமம்
குலவியமர்ந் தருளுதவிச் சமரசமும் காணக்
    கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர்பெருகும் சித்திரங்கள் மிக்க
    அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்.

சிந்துபுடை சூழுமணி பல்லவமென் றின்னும்
    சிறந்தமணித் தீவிதுநா கேஸ்வரமே யென்னும்
வந்தநயி னார்தீவு வளர்நாக தீபம்
    வளமுதவும் பெயர்நாக பூஷணியே பல்பேர்
தந்தனைநீ தரிசிக்கத் தாயவளே யுன்னைத்
    தஞ்சமென வந்தடைவார் தாமடைவர் பேறு
அந்தமுத சுரபிதரும் அம்பிகையே இந்த
    அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்.

தெங்குநிரை பசுமத்தம் சேர்ந்தருளிர் சோலை
    சிந்துவழி படர்காற்றுச் சிந்தைதமகிழ் வூட்ட
தங்குமிவண் அஞ்சலெனத் தானபயம் காட்டித்
    தண்ணருளைத் தரும்நாக பூஷணியே தாயே
இங்குவரும் மக்களவர் எந்நாளும் வாழ்வர்
    இறையவனும் சக்தியின்றேல் ஏதுசெய வல்லான்
அங்கணிசெய் மணியொலிக்க ஆனந்த மூட்டும்
    அழகமைந்த தேரினிலே அருளிய வருவாய்.

— அருட்கவிமாமணி வே. செல்வநாயகம்

## ''விடுதலை இயக்கங்களினாலேயே விடுதலை காணமுடியும்''

யாழ்ப்பாணம், புதன்

''தமிழினம் இன்று விடுதலையை எதிர்நோக்கி, ஒரு சுதந்திர தமிழ்ஈழ குடியரசை நிறுவும் முயற்சியில், இத்தேர்தல் மூலம் சர்வஜன வாக்கெடுப்பாக உதவிகோரி நிற்கின்றது. விடுதலைபெற்றநாடுகளில்கூட, விடுதலை இயக்கங்களுக்கே மக்கள் ஆதரவை வழங்கியுள்ளனர். ''விடுதலை இயக்கங்களினாலேயே இவ்விடுதலை காணமுடியும்'' கொட்டடியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில், சட்டக்கல்லூரிமாணவர் திரு. அலோசியஸ் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு திரு க. புஷ்பராஜா தலைமை தாங்கினார். ஜனாப் முத்துராஜா பேசுகையில், ''ஒற்றுமையைக் குலையாமல், எமது விடுதலைப் போராட்டத்தை வழிநடத்த, கண்ணியம் காத்து செயல்படவேண்டும். தேர்தல் முடிந்தாலும் நமது பணிஓயக்கூடாது. தொடர்ந்து போராட இத்தேர்தலை சர்வசனவாக்கெடுப்பாகக்கருதி செயல்படுவோம்'' என்றார்.

யாழ்ப்பாணத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. யோகேஸ்வரன் பேசுகையில், ''தமிழினத்தின் விடுதலைகோரி மறைந்த தலைவர்கள் பல போராட்டங்களை ஏற்படுத்தினார்கள். ஒற்றையாட்சி முறையில உரிமைபெற முயன்று தோல்வி கண்டனர். இன்று தனித் தமிழ் ஈழம்தான் ஒரே வழி எனக் கூறி அதற்கான மக்கள் சம்மதத்தைக்கோரும் தேர்தலாக பயன்படுத்துகின்றனர்'' என்றார். (கெ)

## தேவி தரிசனம் பெற்றால்....

தேவியின் திருவிழா இன்று புதன்கிழமை தேர், வியாழக்கிழமை ஸ்ரீசக்கரபூஜை, தீர்த்தம், வெள்ளிக்கிழமை தெப்போற்சவம் என்பவற்றுடன் முடிவடையும்.

இராகு, கேது என்னும் கிரகங்கள் ஒவ்வொரு சாதகனுக்கும் பலன் செய்யும்போது, தேவியைத் தரிசிப்பவர்களுக்குச் சாதகமான நற்பலன்களையும், அருள்பெறாதார்க்குப் பாதகமான பலன்களையும் செய்கின்றன.

சாதகத்தில் இராகு, கேது தெசை புத்திகள் நடப்பவர்களில் அனேகர் பொருள் இழந்து, பதவி இழந்து, மனை இழந்து, மனைவியிழந்து, மக்களிழந்து தவிக்கின்றனர். அவர்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டுமானால், மடைர்கள் புத்திரச் செல்வமடையவேண்டுமானால், தேவியைத் தரிசித்தால் போதும்.

ஐ. சரவணபவன்.
(சோதிடர்).

## ''நாம் சிறுபான்மை இனமல்ல; தேசிய இனம்!''

— வ. ந. நவரத்தினம்

மட்டுழ்ல், செவ்வாய்

''இன்று யாரைப்பார்த்தாலும் சுதந்திர தமிழ் ஈழம் கோருவதுதான் தமது இலட்சியம் என்று மக்கள் மத்தியிலே கூறிக்கொள்ளுகிறார்கள். அவ்வளவு தூரம் தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திரதாகம் ஏற்பட்டுள்ளது. இந்த ஒருஉயர்ந்த இலட்சியம் தமிழர் மத்தியிலே தோன்றியுள்ள புனிதமான காலகட்டத்திலே, ஒவ்வொரு தமிழனும் தனது சுதந்திரத்தை, தமிழ்நாட்டின் விடுதலையைத்தான் இலட்சியமாகக் கொள்ளவேண்டுமே தவிர, சொந்தம், பந்தம், பாசம், என்ற சபல உணர்வுகளுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.''

இவ்வாறு சாவகச்சேரி கூட்டணி வேட்பாளர் திரு.வ.ந. நவரத்தினம் கூறினார். நுணாவில் சந்திக்கு அருகாமையில் பண்டிதர் திரு. எஸ். சிவலிங்கம் தலைமையில், திரு. வ. ந. நவரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற இக்கொள்கை விளக்கக் கூட்டத்தில் திரு. வ. ந. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:-

''மாறிமாறி. சிங்களஏகாதிபத்தியத்தினால் நசுக்கப்பட்டு வந்த எமது ஈழத் தமிழினம் இன்றுதான், தமது அடிமை நிலையையும், எதிர்காலத்தில் தனது சந்ததியினரின் சுதந்திர வாழ்வையும் எடைபோட்டுப்பார்க்கிறது. நாம் ஒருசிறுபான்மை இனம் அல்ல, ஒரு தேசிய இனம். ஆண்டபரம்பரை மீண்டும் ஆளத்துடிக்கும் இனம்என்ற இலட்சியத்தில், தனது சுதந்திர வழுங்காது முயற்சியின் சிகரத்திற்கு வந்துள்ளது,

''இப்பொழுது எம்மை எதிர்நோக்கியுள்ள தேர்தல் ஒரு சாதாரண தேர்தல் அல்ல. எம்முடைய குழந்தைச் செல்வங்களின் எதிர்காலத்தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு. இதில் நவரத்தினம், சொந்தக்காரன் என்ற பந்தம் பாசத்திற்கு இடமளிக்காதீர். தமிழர் கூட்டணியாகிய நாம் சுதந்திரத்தமிழ்ஈழம் கோருகிறோம். இதை நாம் பாராளுமன்றம் போனதும் ''இந்தாங்கோ தம்பி நீங்கள் கேட்ட தமிழ் ஈழம்'' என்று எமது கையில் தூக்கித்தரப்போவதில்லை.

''அன்று நமது நாட்டை எமது தமிழ் மன்னன் சங்கிலியனிடம் எந்த நிலையில் அந்நியர் பிடித்தார்களோ அதே நிலையில்தான் நாமும் எமது சுதந்திர தமிழ் ஈழத்தைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோரும் சுதந்திர தமிழ் ஈழத்திற்கும் ஏனையோர்கோரும் தமிழ் ஈழத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்ற கேள்வியை நீங்கள் எழுப்ப வேண்டிய அவசியம். அவர்கள் கோருவது சுதந்திர தமிழ் ஈழம் அல்ல. சுதந்திரமான தமது பதவி. ஆகவே அது ஆனை உண்ட விளாங்கனி போன்றது, அதை மறந்துவிடக்கூடாது.''

சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் பேசுகையில் ''எமக்கு ஏதாவது சலுகைகளைக் காட்டி, வீதி, பாலம் என்று கண்துடைப்புச் செய்ய ஒருசிலர் முயலுகிறார்கள். எமக்குத்தேவை சுதந்திரஈழமே தவிர சலுகைகள் அல்ல'' என்றார்.

இதைத்தொடர்ந்து இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு. வல்லிபுரம், திரு. மு. இராமலிங்கம், திரு. ச. யோகராஜா திரு. ஆ. நடராஜா, உட்படப் பலர் பேசினர். ஒலிபெருக்கி வசதிகள் எமக்கு வேண்டாம், கருத்துரைகளைக் கூறுங்கள் என்று பொதுமக்கள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து ஒலிபெருக்கியின்றி நீண்டநேரம் ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்னால் திரு. வ. ந. நவரத்தினம் பேசினார்.

## எம். பி. யாவது எப்படி?

# நியமனநாள் நிகழ்ச்சிகள்!

நியமனத் தேதியன்று பிற்பகல் 1 மணிவரைக்கும் நியமனப்பத்திரப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம் என்று சட்ட ஏற்பாடு செய்துவிட்டு நியமன நாளன்று பதினொரு மணிக்குப் பின்னர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்று சட்டமாக்கியிருப்பது விசித்திரமாகவும், அபத்தமாகவும் இருக்கிறது இல்லையா? சிந்தியுங்கள். ஆட்சேபனை மனுவைக் கோப்பிடும் போது இந்தச் சட்டச் சறுக்கலைச் சுட்டிக் காட்டினால் பயன் விளையக் கூடும்.

இப்போது நியமனநாள் நிகழ்ச்சிகளுக்குத் திரும்பிப் போவோம். உதாரணத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துக் கொள்ளுவோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினொரு தேர்தல் தொகுதிகள் உள்ளன. இவற்றுள் ஒவ்வொரு தொகுதிக்குமான நியமனப்பத்திரங்களைஎந்த இடத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பது பற்றியபுகட்டுரைகளை முன்கூட்டியே தேர்தல் அலுவலர், வேட்பாளருக்கு முன்மொழிபவருக்கு வழங்குவார். நியமன நாளன்று நியமனப் பத்திரத்தை சமர்ப்பிக்கும் இடத்துக்கு வாகனங்களோ சாதாரண ஆட்களோ போக முடியாது. நியமன இடத்தில் யார்யார் பிரசன்னமாக இருக்கலாம் என்று அரசப் பேரவைக் கட்டளையின் 32-ம் பிரிவு கூறுகின்றது. தேர்தல் பொறுப்பு உத்தியோகத்தர் அவருக்கு உதவி செய்யும் அலுவலர்கள், வேட்பாளர்கள் முன்மொழிபவர்கள், வழிமொழிபவர்கள், ஒவ்வொரு வேட்பாளராலும் தேர்ந்தெடுக்கப்படும் இன்னும் ஒருவர்,

### சட்டமும் சமுதாயமும்

ஆகியோர் தவிர்ந்த வேறெவரும் நியமன இடத்துக்குள் செல்ல முடியாது. ஒரு வேட்பாளர், தம்முடன் இன்னும் ஏழு பேரை நியமன இடத்திற்குள் எடுத்துச் செல்ல முடியும். எப்படி? ஒரு வேட்பாளர் தனித்தனியாக மூன்று நியமனப்பத்திரங்களால் பெயர் குறித்து நியமிக்கப்படலாம், ஒரு நியமனத்துக்கு முன்மொழிபவர் வழிமொழிபவர் ஆகிய இருவர் தேவை. ஆக மூன்றுக்கும் 6 பேர் தேவை. இந்த ஆறோடு வேட்பாளர் தெரிந்தெடுக்கும் அந்த ஒருவரையும் சேர்த்தால் ஏழு ஆகும்.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் 3 மோட்டார் கார்ப் பெமிற்றுக்கள் (Carpermits) வழங்கப்படும் இவற்றுள் ஒன்று வேட்பாளருக்கும், மற்றைய இரண்டும் முன்மொழிவோர், வழிமொழிவோர் ஆகியோருக்கும் உரியன.

நியமன நாளன்று பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் இடையில் மட்டும் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமாதலால், வெள்ளெனவாகவே காலை 9-30 அளவில் நியமன இடத்துக்குச் சென்றுவிடுதல் விரும்பத்தக்கது 'நாளும் கோளும் நல்லோர்க்கில்லை' என்று சொல்லப்படினும், நல்ல சகுனம் பார்த்துப் புறப்படுதல் வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு.

நியமன இடத்துக்கு புறப்படுமுன்னர் பின்வருவனவற்றைக் கவனிக்க வேண்டும்:

(1) எத்தனை நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கப் போகிறீர்கள் என்று நிதானித்துக் கொள்ளுங்கள்.

(2) நியமனப்பத்திரங்கள் முறைப்படி நிரப்பப் பட்டுள்ளனவா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

(3) வேட்பாளரின் முழுப் பெயர், முகவரி, தொழில் விபரம் ஆகியன தெளிவாக எழுதப்பட்டுள்ளனவா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

(4) முன்மொழிபவரின் முழுப்பெயர், அவருடைய தேர்தல் தொகுதிக்கான தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் எந்த வாக்கெடுப்பு மாவட்டத்தின் கீழ் இடம்பெற்றுள்ளதோ அந்த வாக்கெடுப்பு மாவட்டத்துக்குரிய குறியீட்டு எழுத்து, அவருடைய பெயருக்கெதிராக வலப்புறத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தொடரிலக்கம் ஆகியன தெளிவாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

(5) வழிமொழிபவரின் முழுப்பெயர் முதலியன மேலே (4)இல் கூறியவாறு தெளிவாக எழுதப்பட்டுள்ளனவா என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

— செ.சிறீக்கந்தராசா —

(சட்டத்தரணி

(6) முன்மொழிபவரும் வழிமொழிபவரும் தத்தமது கையொப்பங்களை அவற்றுக்குரிய இடங்களில் வைத்துள்ளார்களா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். முன்மொழிபவர் கையொப்பமிடவேண்டிய இடத்தில்வழிமொழிபவரும், வழிமொழிபவர் கையொப்பமிட வேண்டிய இடத்தில் முன்மொழிபவரும் ஒப்பமிட்டுக் குழப்பியுள்ளார்களா என்று கவனித்துக்கொள்ளுங்கள். இதில் பிழை நேர்ந்தால் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டுவிடும்.

(7) முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரின் ஒப்பங்களை சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/ பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தியுள்ளாரா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் தமது ரபர் முத்திரையச்சைப்(Rubber Stamp) பொறித்தல் நன்று

(8) வேட்பாளராக நியமிக்கப்படச் சம்மதிப்பதாக வேட்பாளர் அந்த நியமனப்பத்திரத்தில் எழுத்துமூலமாகச் சம்மதம் தெரிவித்து ஒப்பமிட்டிருக்கிறாரா என்று பார்த்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உடனடியாக அவரைக் கொண்டு அந்த நியமனப்பத்திரத்தின் அடியில் "நான் இதற்குச் சம்மதிக்கிறேன்" என்று எழுதுவித்துக் கையொப்பத்தையும் போடச்செய்யுங்கள்.

(9) நியமனப்பத்திரம் என்னும்போது, ஒரு மூலமும் ஒரு பிரதியும் சேர்ந்ததுதான் ஒரு நியமனப்பத்திரம் என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே மூலமும் பிரதியும் நிரப்பப்பட்ட விதம் ஒரே மாதிரியாக முரணின்றி இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

(10) உங்கள் கண்ணும், ஏன் மூளையும்கூட, உங்களை ஏமாற்றலாம்; ஆதலால், ஒரு சட்ட அறிஞரை உங்களுடன் நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்வரை வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் அவரையும் முழுக்க முழுக்க நம்பிவிடாதீர்கள். அவருக்கும் அடி சறுக்கலாம்.

நியமனப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கான நேரம் நியமன நாளன்று காலை பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் இடையில் எனினும் உங்களுடைய தேர்தற்பொறுப்பு உத்தியோகத்தர் வெள்ளெனவாகவே, காலை 9-30 மணிக்கே நியமன இடத்துக்கு வந்துவிடுவார். எல்லோரும் வெள்ளெனவாகவே வந்துவிட்டால் 9-45 அளவில் அந்தத் தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் வேட்பாளர்களுக்கும் முன்மொழிவோருக்கும் என ஒரு சில அறிவுரைகளைக்கூறுவார். நியமனப் பத்திரம் எப்படி நிரப்பப்பட்டிருக்கவேண்டும்என்பது பற்றியும், என்ன நேரம் வரை நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது பற்றியும் அவர் சில அறிவுரைகளை வழங்குவார்.

தேர்தல் பொறுப்புத்தியோகத்தரால் தேர்தல் அலுவலகத்தில் வழங்கப்படுகின்ற அந்த நியமனப்பத்திரப் படிவத்தில் தான் நிரப்பவேண்டுமா? அப்படியான ஒரு கட்டுப்பாடோ விதிப்போகிடையாது. இ.பா.தே. அரச பேரவைக் கட்டளையின் G என்னும் படிவ மாதிரியைப்போல ஒரு படிவத்தை தயாரித்து அதனை முறைப்படி நிரப்பிக்கொடுத்தால் போதுமானதென 28 (5)ஆம் பிரிவு விளக்கம் தருகிறது.

### நியமனப்பத்திரத்தை எப்படிச் சமர்ப்பிப்பது? யார் சமர்ப்பிப்பது?

நியமனப்பத்திரம்வேட்பாளராலோ, முன்மொழிபவராலோ, வழிமொழிபவராலோ சமர்ப்பிக்கப்படலாம். வேறு எவரும் அதனைச் சமர்ப்பிக்க முடியாது. வேட்பாளரின் சட்ட ஆலோசகர் அதனைச் சமர்ப்பிக்க முடியாதா? முடியவே முடியாது. நியமனப்பத்திரமானது தேர்தற்பொறுப்புத்தியோகத்தரிடம் நேரடியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும். தேர்தற் பொறுப்புத்தியோகத்தருக்கு உதவியாளர்களாக அங்கு நியமன இடத்தில் இருக்கும் அலுவலரிடம் ஒப்படைப்பது சட்டப்படி ஒப்படைப்பாகாது. தேர்தற் பொறுப்புத்தியோகத்தரின் கையில் ஒப்படைக்காமல் அவருடைய மேசையில் வைப்பதும்ஒப்படைப்பாகாது. அதுவும் காலை பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் இடையில் அது ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

### நியமனப் பத்திரத்தோடு சேர்த்து வேறெதையும் ஒப்படைக்க வேண்டுமா?

கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக, கட்டுப்பணஞ்செலுத்தியமைக்காக பற்றுச்சீட்டையும் நியமனப்பத்திரத்துடன் சேர்த்து தேர்தற் பொறுப்புத்தியோகத்திதரிடம் ஒப்படைத்தல்வேண்டும். பரிசோதனை செய்தபின்னர் இந்தப்பற்றுச்சீட்டு வேட்பாளரிடம் திருப்பிக்கொடுக்கப்படும்.

(தொடரும்)

## "இப்படித்தான் கூறினேன்"

யாழ்ப்பாணம்,புதன்

யாழ். சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களின் அனுமதியோடும் அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் ஆலோசனையின் பேரிலேயுமே யாழ். சுயேச்சை வேட்பாளர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தை (குமார்) ஆதரிக்கவேண்டும் என்றே தாம் கொழும்புத்துறை கூட்டத்தில் கூறியதாக சுதந்திரக்கட்சி பிரமுகரும் முன்னாள் யாழ். மாநகர சபையின் விசேட ஆணையாளருமாகிய திரு வே. நடராசா நேற்று தெரிவித்தார். (கு

## கூட்டம்

சென்னை, ஜூன் 28

தமிழ் நாடு சட்டசபையின் புதிய ஆட்சியில் தி.மு.க.வின் பணிகள் என்ன என்பதுபற்றி ஆராய தி.மு.க.செயற்குழு அடுத்தமாதம் 1ம் திகதி சென்னையில் கூடுகிறது. (இ)



மயிலர்: அந்தக் காலம் ஆனி ஆடி எண்ணப்போட்டிக்குப் பட்டங்கள் பறக்கவிடத் தொடங்கிவிடுவினம். இந்தக் காலம் பட்டத்தை எங்கே காணிறது.

வேலர்: ஏன் வேட்பாளர்கள் போட்டிக்குப் பணம் பறக்கவிடுகினமாம். பெரும் கடதாசிக் காசெல்லாம் காற்றிலே மிதக்குதாம்.

மணியம்: அதுமட்டுமே ஆட்களின் பட்டப்பேருமல்லே மேடையிலிருந்து பறக்கவிடுகினம்!

— சுந்தர்

## "கொள்கை முரண்பாட்டுக் கட்சிகளே கூட்டணி"

### சாவகச்சேரி மயில்வாகனன் பிரசாரக் கூட்டத்தில் வி. நவம்

மட்டுவில், செவ்வாய்

"தனிநாடுபற்றி அன்று நான் கோரிக்கை எழுப்பிய போது என்னைப் பார்த்துக் கிண்டல் செய்த சிலர், இன்று தாமும் தமிழ்நாடு தான் கோருவதாகக் கூட்டணியில் நிற்கின்றனர். சுயாட்சிக் கழகத்தின் 'சர்வஜன வாக்கெடுப்பு, 'சுதந்திரத் தமிழ் ஈழம்' என்ற சில சொற்பதங்களைத் திருடிக் கொண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி நாடகம் போடுகிறது."

இவ்வாறு சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் சாவகச்சேரியில் பேசுகையில் கூறினார். சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில் திருமதி பாலசிங்கம் தலைமையில், சாவகச்சேரி சுயாட்சிக்கழக வேட்பாளர் சட்டத்தரணி திரு. சி. பொ. மயில்வாகனனை ஆதரித்து இந்தக் கூட்டம் நடைபெற்றது சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழர் விடுதலைக்கூட்டணி மாவட்டசபையைக் கோரியது. அப்பொழுது நான், சுயாட்சியைக் கோரினேன். நான் சுயாட்சியைக் கோரியபோது என்னைக் கேலியும் செய்தனர். அன்று நான் புகையிரதத்தில் பிரயாணம் செய்யும்பொழுது நண்பர் அன்றைய உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் என்னைப் பார்த்துத் தனிநாடுபற்றிக் கிண்டல் செய்தார். தமிழ்க்காங்கிரஸ் அன்று முதல் ஒற்றையாட்சித் திட்டத்தையே தமது கொள்கையாகக்கொண்டிருந்தது. தொழிலாளர் காங்கிரஸோ, தனித் தமிழ்நாடு தமக்குச் சாத்தியப்படாது என்று கூறிவிட்டது இப்படிக் கொள்கை முரண்பாடுகளைக் கொண்ட கட்சியினரே இன்று கூட்டணியாகச் சேர்ந்துள்ளனர். தனித் தமிழ்நாடு கோரி நிற்கின்றனரே, இவர்களை மக்கள் எப்படி நம்புவது?

"அன்று மக்கள் மத்தியில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று ஆட்சி மன்றம் சென்ற தமிழ்க்காங்கிரஸ் இன்று வீழ்ச்சியடைந்தது ஏன்? மந்திரிப் பதவி மோகத்தால்தான். தமிழரசார் அடையாள அட்டை மசோதாவில் பல அம்சங்களில் அரசுடன் ஒத்துழைத்தனர். மந்திரிப் பதவி ஆசையினால்."

சுயாட்சிக் கழகச் செயலாளர் சட்டத்தரணி திரு. செ. கோடீஸ்வரன் பேசுகையில், "நமது தலைவர் திரு. நவரத்தினம், ஸ்ரீமாவோ -சாஸ்திரி ஒப்பந்தத்தை ஏன் எதிர்த்தார். மலைநாட்டுத் தமிழர் இலங்கையை விட்டுப் போய் விட்டால், தமிழரின் பலம் குறைந்துவிடும் என்பதற்காகவே எதிர்த்தார். மேலும் தமிழினத்தை அவமதிக்கும் அடையாள அட்டை மசோதாவையும் எதிர்த்தார். திருமலை பாதயாத்திரை, தமிழ் முத்திரையை அச்சிட்டு விற்ற துணிகரமான செயல்களையெல்லாம் அன்று தமிழரசுக் கட்சியிலிருந்த திரு நவரத்தினமே செய்தார்" என்றார். மேலும் பலர் பேசினர். அ)

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,புதன்

"தமிழினத்தின் நல்வாழ்வுக்காக நமது தலைவர்கள் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா அவர்கள் எம்மையெல்லாம் சுயநிர்ணய தமிழ் ஈழக்குடியரசை நிறுவும் பணிக்கு தயாராக்கிச் சென்றுள்ளார்கள். நாம் அவர்களுக்கு அஞ்சலி செய்வதால் அப்பணியை ஈடு செய்யமுடியாது. அவர்களின் இலட்சியக் கனவை நனவாக்கப்பாடுபட வேண்டும்" கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. ச. பசுபதீஸ்வரன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொதுக்கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தமிழ்த் தலைவர்களுக்கு இரண்டுநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## "சிறுபான்மைத்தமிழருக்கு

# காணிவழங்கி குடியிருப்புத் திட்டத்தை ஆரம்பித்தார்"

உடுப்பிட்டி, செவ்.

"பருத்தித்துறைத் தொகுதியில்திரு. கே. ரி. இராஜசிங்கத்தின்சேவையும், அபிவிருத்தித் திட்டங்களும் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளன."

இவ்வாறு புலோலி தெற்கில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திரு வ.சூசைராஜா குறிப்பிட்டார்.

பருத்தித்துறைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு.கே.ரி. இராஜசிங்கத்தை ஆதரித்து இக் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு.சூசைராஜா ரோமலும் பேசுகையில் சொன்னதாவது:

"பொதுத்தேர்தல் நெருங்கியதுமே பலர் வேட்பாளராக எம்முன் வந்து அது செய்வோம் இதுசெய்வோம் என்று வாக்குக் கேட்கின்றனர். இவர்கள் தேர்தல் வருவதற்கு முன்னர் எங்கே போயிருந்தனர்? அப்பொழுது எமது குறைபாடுகள். தேவைகள் அவர்களின் கண்ணில்படவில்லையா சிறுபான்மை சமூகத்தவர்களுக்கெனக் குடியிருப்புத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துக்காணியற்றவர்களுக்கு நிலம் வழங்கி உதவிய திரு.இராசசிங்கத்தை சிறுபான்மைச் சமூகத்தவர்கள் முழுமூச்சுடன் ஆதரித்துவருகின்றனர்."

# "கொள்கை மாறுபவர்களை பின்பற்றுவதால் விடிவு ஏற்படாது"

### காங்கேசன் தொகுதி ஸ்ரீதரன் கூறுகிறார்

மாவிட்டபுரம், செவ்.

"சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து 60, 65-ல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியவர்கள் பின்னர் சமஷ்டிக் கொள்கையைக் கை விட்டுவிட்டு இன்று தனிநாடு என்று கூறி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துகிறார்கள். அடிப்படைக் கொள்கையில் திடீர் திடீரென மாறுபவர்களை நம்பி தமிழினம் செல்வதால் ஒரு போதும் விடிவு ஏற்படப் போவதில்லை."

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு சிவஸ்ரீதரன். மல்லாகம் நீதிமன்றத்திற்கு அருகாமையில் நடைபெற்றக் கருத்தரங்கில் பேசுகையில்கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஜனநாயகத்தை நிலைநாட்டவும் சர்வாதிகாரத்தை விரட்டவும் சத்தியப்போர் தொடுக்க நான் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.

"70-ம் ஆண்டு புளியங்கூடலில் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினமும், திரு. அ. அமிர்தலிங்கமும் பொதுமேடையில் தோன்றிய போது "தமிழ் ஈழம்" கேட்பது தற்கொலைக்கு ஒப்பானது. 600 வருடங்கள் சென்றாலும் சமஷ்டி ஆட்சியைத் தான் நாம் கோருவோம்" என்று அமிர்தலிங்கம் சொன்னார்

56-ம் ஆண்டு திரு. சுந்தரலிங்கம் தனிநாடு பிரேரணை கொண்டு வந்தசமயம் அதனை ஆதரிக்காதவர்கள் இன்று தமிழ் ஈழத்திற்கு தாங்கள் தான் தந்தை என்று கூறுவது வியப்புக்கிடமானது.

தமிழரின் கொள்கையை ஏற்காத திரு. தொண்டமான், திரு. செல்லச்சாமி அவர்களையும் தமிழர் கூட்டணி வேட்பாளர் என்றுகூறுகிறார்களே" (அ)

# "ஜே.ஆர்.ஆட்சியில் தமிழர் பிரச்னை முற்றாகத் தீரும்"

### மானிப்பாய் ஐ. தே. க.வேட்பாளர் அலோஷியஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கையில் முதன்முதல் தமிழ்மொழி விசேஷ மசோதாவைக்கொண்டு வந்து ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றியவர் அமரர் டட்லிசேனநாயக்கா. அதேபோல திரு. ஜே. ஆர். பிரதமரானால் தமிழர்களின் பிரச்னைகள் முற்றாகத் தீர்க்கப்படும்" என்று மயிலணியில் நடைபெற்ற ஐ. தே கட்சி பிரசாரக் கருத்தரங்கில் மானிப்பாய்த் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு. எஸ். அலோசியஸ் கூறினார்.

ஜனசக்தி சனசமூகநிலையத்தில் திரு. நகுலேஸ்வரன் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. திரு. அலோசியஸ் மேலும் கூறியதாவது:

"ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி ஏற்பட்டதும் எனது தொகுதியில் புரோக்கர் முறையை ஒழிப்பேன். அரசியல்பாகுபாடின்றி அனைவருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவேன் ஐ தே.கட்சி இப்போதுவாலிபசமுதாயத்துக்கே முதலிடம் அளிக்கிறது. 1970-ம் ஆண்டு நடந்த தேர்தலிலே ஐக்கிய தேசியக்கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம், இரண்டு கொத்து அரிசி என்ற பொய் வாக்குறுதியை சுதந்திரக்கட்சி அரசு அளித்தமையே. ஜனநாயகம் என்ற பலமான அத்திபாரத்தில்எழுப்பப்பட்ட கட்சி ஐ. தே. கட்சி இக் கட்சியால் இந் நாட்டை நல்ல முறையில் பரிபாலிக்கமுடியும். இன்று இந் நாட்டுத் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் சுதந்திரமற்ற இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டு வருகிறார்கள். ஏனைய சமூகத்தவர்களுக்குள்ள உரிமைகளும் சலுகைகளும் இந்நாட்டிலுள்ள தமிழர்களுக்கும் உண்டு என்பதை ஐ. தே. கட்சி ஆட்சி நிரூபிக்கும்.

"கூட்டுறவுச் சங்கத்துக்கு தலைவராக வரவேண்டும் என்று மட்டும் நான் தேர்தலில் போட்டியிடுவதாகக் கூறுகின்றனர். பதவிஆசை எனக்கு இல்லை. இரண்டு இனங்களும் ஒற்றுமையாக உரிமைகளோடு வாழவேண்டும் என்பது எங்களது கொள்கை. அனைவருக்கும் சேவைசெய்ய வேண்டும். பேச்சு அல்ல; செயலே தேவை."

திரு. ஸ்ரீபதிநாதன் பேசுகையில் "வெறும் கல்வித்தகைமையினால் மட்டும் பயனில்லையென்றும், அனுபவமும் அறிவுமே முக்கியமென்றும், படித்துப் பட்டம் பெருத பலர் இந் நாட்டிலும் வேறுநாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தியிருக்கிறார்கள் என்றும், எமது வேட்பாளரும் ஆட்சிமன்றம் செல்வதற்குத் தகுதியானவர்" என்றும் கூறினார்.

திரு. சபா சின்னத்தம்பியும் பேசினர். [அ]

# குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தில் அடுத்த மாதம் 1-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் வழமைபோல் குருபூர்ணிமா தினம் கொண்டாடப்படும். பகலில் திருமுறை ஓதுதல், நடேசர் அபிஷேகம், ஆராதனை, வியாஸ பூசை, பாத பூசை, மாகஸ்வர பூசை ஆகியனவும் இரவு சமயஇசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (அ)

# இவர்மீது மீண்டும் பல திருட்டுக் குற்றச்சாட்டு

மாவிட்டபுரம். செவ்.

சீர்திருத்தப் பாடசாலையிலிருந்து தப்பியோடி,மாவிட்டபுரப்பகுதியில் பல்வேறுதிருட்டுக்களில் ஈடுபட்டநபர் ஒருவர் கடையொன்றில் திருட்டில் ஈடுபட்டிருந்த சமயம் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்

குரும்பசிட்டியைச் சேர்ந்த ந. பாலகிருஷ்ணன் என்னும் 19 வயது வாலிபர் முன்னர் பல்வேறு திருட்டுக்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அங்கிருந்து தப்பியோடி வந்த இந்நபர் மாவிட்டபுரம் பகுதியில் பகுதியில் பலஇடங்களில் திருட்டில் ஈடுபட்டு திருட்டுப் பொருட்களை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்வீதியில்நிற்கும்ஆலயத் தேரினுள் மறைத்து வைத்திருந்தார்.

மாவிட்டபுரத்திலுள்ள கந்தையா பொன்னம்பலம் என்பவரது கடையினுள் இவர் தமது கைவரிசையைக்காட்ட இறங்கியசமயம் ஊரவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

இவரை விசாரணை செய்த சமயம் பல இடங்களில் இடம் பெற்ற களவுகள் வெளியானதுடன் மாவை ஆலயத்தித்தேரினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இவரை மல்லாகம் நீதிபதிஞன் ஆஜர்செய்த சமயம் றிமாண்டில் வைக்க உத்தரவிடப்பட்டார். (அ)

## எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், செவ்.

வீடு தீவைப்பு வழக்கொன்றில் சாட்சி முரண்பாட்டால் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

மாவிட்டபுரம் வைரவி சின்னத்தம்பியின் வீட்டை நெருப்புவைத்து எரித்து 3000 ரூபா நஷ்டம் விளைவித்ததாக அவ்விடத்தைச் சேர்ந்த கதிரவேலு, மகேஸ்வரி, கதிரவேலு சின்னத்தங்கம் ஆகியோர்மீது குற்றம்சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றததில் விசாரணைக்கு எடுக்கப்பட்டசமயம் சாட்சி முரண்பாடு காரணமாக எதிரிகள்விடுதலைசெய்யப்பட்டனர்,

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், வழக்காளிதரப்பில் அட்டோர்ணி ஜெனரலின் சார்பில் திரு. ஜி. வி. பாலசிங்கமும் ஆஜராகிஇருந்தனர்.

## ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், புதன்

கரைச்சிக் கிராமசபை, அச்சுவேலிக் கிராமசபை, பல்லவராயன்கட்டு கிராமசபை, பூநகரி கிராமசபை ஆகிய பகுதிகளில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வைத்தியராகக் கடமையாற்றிய ஆயுர்வேத டாக்டர் திரு. க. பொன்னம்பலம் இம்மாதம் தொடக்கம் தமது பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறார். (கா-அ)


## கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு

கொழும்பு. செவ்.

இலங்கை இரசாயன நிறுவனம், இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடத்திய (தமிழ்) கட்டுரைப் போட்டியில், இளவாலை சென். ஹென்றி கல்லூரியைச் சேர்ந்த ஏ. கியூ. சுரேந்திர குமார் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில, சிங்கள, தமிழ்க் கட்டுரைப் போட்டியை மேற்படி நிறுவனம் இம்மாதம் 1-ம் திகதி நடத்தியிருந்தது. 20 வயதுக்குட்பட்ட ஏராளமான மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு கடந்த 17 ம் திகதி பரிசுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன.

இதயத்தைத்தொடும் வேளைகளுக்கு இதமான பாதணிகள்

பாட்டாவின் செருப்புக்கள், சான்டல்கள், சப்பல்ஸ் ஆகியனவற்றில் சௌகரியமாக, எழிலாக, அழகாக அசைந்து திரியுங்கள்... இறகு போன்று இலகுவானவை சறுக்காக அடித்தளங்கள்... புரட்சிகரமான வர்ணங்கள், மோஸ்தர்கள்... அனுயாசமாகத்துள்ளித்திரியும்இதயங்களுக்கு... நவீன மோஸ்தர்களில் பாதணிகள்... பாட்டாவிடமிருந்து.

பாட்டா

வளமான மண்,
தெளிந்த நீர்,
சுத்தமான காற்று,
சுதந்திரமான விலங்கினம்,
குப்பையிடாதீர்.

பாட்டா Bata

GRANT K 65 630

58-வது நாள்

**ராணி** (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

தினசரி 4 காட்சிகள்

## நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)

ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ நடித்த

தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்

## தபால்காரன் தங்கை

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்) (புதிய பிரதி)

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெய்சங்கர் நடித்த

## வல்லவன் ஒருவன்

**சாந்தி**

இப்பொழுது நடைபெறுகின்றது!

யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்

போன்; 7642

10-30, 2-30, 6-30, 9-45

★ அசோகன் ★ சந்திரகாந்தா ★ விஜயன் ★ வசந்தா நடித்த

## கார்த்திகைதீபம்

(புதிய பிரதி)

அடுத்தவெளியீடு!

ஃசிவாஜி ஃ சரோஜாதேவி ஃ எம்.ஆர். ராதா

## இருவர் உள்ளம்

**REGAL** (JAFFNA) CROWDED 2nd WEEK Daily: 4-45, 7-00 & 9-30 p. m.

Dicing with Danger. Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- Catching Girls... and Ruthless Crooks.

Tony Curtis – Roger Moore – Susan George

in

## "Mission Monte Carlo"

(Color) (Action Packed Film)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி

மற்றும் பலர் திறம்பட நடித்த

ஈழத்திரையோவியம்

ஜெயேந்திரா மூவீஸ்

## காத்திருப்பேன் உனக்காக

**மனோகரா** [யாழ்ப்பாணம்]

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி (இருவேடங்களில்) நடித்த

## மனிதனும் தெய்வமாகலாம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

## ஸ்ரீதரின் வைரநெஞ்சம்

(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்)

54-வது தினம்

தினசரி 4 காட்சிகள்

போன்: 7180

தேவரின்

## திருவருள்

(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.


### திடீர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் வி. விஸ்வலிங்கம், டாக்டர் கே. இராமநாதன், டாக்டர் தர்மதுரை ஆகியோர் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள். திறப்புவிழா முடிவடைந்ததும் உடனடியாக விரிவுரைகள் ஆரம்பமானது.

மற்றும் மாணவர்களும், விரிவுரையாளர்களும் இன்று வந்துசேருவார்கள், என டாக்டார் ஜெயரத்தினம் கூறினர்.

திறப்புவிழாவில் டாக்டர் ஜெயோரத்தினம் கூறியதாவது: "கடந்த 2 வருடத்திற்கு முன்னதாக நான் கல்லூரி அதிபராக இருந்தேன். மாணவர்களின் வேண்டுகோள்படி நான்ஒதுங்கியிருந்தேன் கடந்த 2 ஆண்டுகளாகக் கல்லூரி நிர்வாகம் சீர்கேடு நிலை அடைந்ததால், மீண்டும் கல்லூரியைப் பொறுப்பேற்று நடாத்தும்படி, மாணவர்களும், என்னிடம்கோரினர்கள். கல்லூரி மூடப்பட்டிருந்த காரணத்தினால் இதனைப்பொறுப்பேற்று நடத்தமுன்வந்துள்ளேன். விரிவுரையாளர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்சங்கத் தலைவர் திரு. கே. வி. கே. திருலோக சுந்தரமூர்த்தி, விரிவுரையாளர், திரு. வி. விஸ்வலிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள்.

# 'சுதந்திர தமிழ்ஈழம் நிறுவ வேண்டும்'

—சதா நடராசா

சாவகச்சேரி, செவ்

'கடந்த நானூறு வருடங்களாக அடிமையாக வாழ்ந்த தமிழினம் புத்தொளிபெற்று சுதந்திர இனமாக ஏனைய நாடுகளுடன் தலைநிமிர்ந்து சமத்துவமாக வாழ வேண்டுமானால் தமிழர்களின்ஒன்றுபட்ட ஒத்துழைப்பு வேண்டும்'

சாவகச்சேரியில் போட்டியிடும் தமிழ் ஈழ அரசுக் கழகத் தலைவர் திரு. சதா. நடராசா மீசாலையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எம. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. சதா நடராசா பேசும் போது மேலும் கூறியதாவது: 'நம்நாட்டில் சுதந்திர ஈழம் ஒன்று உதயமாகி நம்மை நாம் ஆளவேண்டும். எமது நிலத்தில் ஒரு சிறுபகுதியேனும் பிறர் கையில் போகாது காப்பாற்ற வேண்டும் எமது கலை கலாச்சாரம் மதம் என்பவற்றை நாம் காப்பாற்ற அரசியல் தலைவர்கள் பொதுமக்களை பங்காளிகளாக்கி தமது முழு நேரத்தையும் அரசியல் தொண்டில் ஈடுபடுத்த வேண்டும்.

திரு. எஸ். கனகசபாபதி திரு. வீ. நாகேந்திரன் ஆகியோரும் பேசினர். (த)

# தளபாடங்களை எடுக்க தடை உத்தரவு!

## கல்லூரி மூடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

லங்கா ஆயுர்வேதகல்லூரியிலுள்ள தளபாடங்களை எவரும், எடுக்ககூடாதென்று பொலிஸாரின் உத்தரவின் பேரில், கல்லூரி மூடப்பட்டுள்ளது!

இக்கல்லூரியின் புனரமைப்புபற்றி ஆலோசனை செய்வதற்காக அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ.எல். விஜயபாலா கூட்டிய மாநாட்டில்' 2கிழமைக்குள் கல்லூரியை நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இதனை தலைவர் திரு. ஏ.வி. இராசரத்தினம் ஏற்றுக்கொண்டார். இதேசமயம் இரு தினங்களுக்குமுன் நிர்வாக அதிகாரியான டாக்டர் கங்காதரம்' 2லொறிகளுடன் சென்று கல்லூரி தளபாடங்களை ஏற்றிச் செல்ல முற்பட்டதாகவும், தளபாடங்களுக்கு பொறுப்பான ஏ.எஸ் பரஞ்சோதி நாதரும், காவலாளியும், அதனை தடை செய்து உடனடியாக பொலிசில் புகார் செய்ததாகவும் தெரிய வருகிறது.

இன்ஸ்பெக்டர் கே பத்மநாதன் நடத்திய விசாரணையின் பின் வழக்குகள் முடியும் வரை தளபாடங்களை எவரும் எடுத்துச் செல்லக்கூடாதென்றும் அதுவரை கல்லூரி பூட்டப்பட்டிருக்க வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து நேற்றுக்காலை விரிவுரையாளர்களும் மாணவர்களும் அரசாங்க அதிபரைச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கோரினர்கள். இச்சந்திப்பின்போது, வழக்குமுடியும்வரை புதிய இடத்தில் கல்லூரியை நடத்துவதென்றும் முடிவாகியது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் தலைமையில் டாக்டர் ஜேயோரத்தினம் புதிய இடத்தில் கல்லூரியை திறந்துவைத்தார்.

தற்காலிக இயக்குநர்சபை ஒன்றும் நிறுவப்படவிருப்பதாகவும், திறப்புவிழாவின்போது தெரிவிக்கப்பட்டது.

நிர்வாக அதிகாரி டாக்டர் கங்காதரம், பைல்களையும், தஸ்தாவேஜுகளையும் எடுத்துச் சென்றுள்ளதாகவும், பொலிஸில் புகார் செய்திருப்பதாகவும், இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)


2-வது வாரம்

**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி—விஜயா நடித்த

## தங்கப்பதக்கம்

**வெஸ்லி** [மானிப்பாய்]

தினசரி 6-30, 9-3

சனி, ஞாயிறு 2-30

எம். ஜி. ஆர்— ஜெயலலிதா

## கணவன்

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)

தினசரி 2-30, 6-30, 9-30

சனி, ஞாயிறு 10-30

முத்துராமன் - சுஜாதா

## வாழ்ந்து காட்டுகிறேன்


### துப்பாக்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டிலிருந்த வயோதிபப் பெண்களை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி, திருடர்கள் இக்கொள்ளையை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. [வண். நி]


**RIO** (Jaffna) Daily 4 Shows Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

ANTHONY QUINN

In

## Savage Innocents


# யாழ் வர்த்தக வங்கி வெற்றி

நல்லூர், செவ்வாய்

யாழ். வர்த்தக வங்கி ஊழியர் கோஷ்டிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான கூடைப்பந்தாட்டப் போட்டியில் வர்த்தக வங்கி 36—20 புள்ளிகளால் வெற்றியீட்டியது யாழ். வர்த்தக வங்கி கலந்து கொண்ட முதல் கூடைப்பந்தாட்டப்போட்டி இதுவென்பது குறிப்பிடத்தக்கது ஆட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரித்திடலில் நடைபெற்றது.

### சந்திரோதயாவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களால் மணிவாசகர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 'இறைவனை வணங்கி அவனிடம் நம்மை முற்றாக ஒப்படைத்தால் நமது வேலைகளையெல்லாம் இறைவனே செய்துமுடிப்பான். செம்மனச் செல்வி அம்மையாருக்காகக் கூலியாளாகவும், மணிவாசகருக்காகக் குதிரைப்பாகனாகவும் வேடந்தாங்கிய இறைவன் திருவிளையாடல்களை ஆதாரங்காட்டி மாணவர்கள் பேசினர். அதிபர் வித்துவான் மு. நவரத்தினம் தலைமை வகித்தார் (அ)

### திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா சமிதியினர் நாளை வியாழக்கிழமை திருநெல்வேலி சேர். பொன். இராமநாதான் வீதியில் உள்ள சமிதி மண்டபத்தில் குருபூர்ணிமாதினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

அன்றையதினம் முற்பகல் திரு. எஸ். சபாரத்தினத்தின் இல்லத்தில் (51 பலாலிவீதி) நகரசங்கீர்த்தனமும் பிற்பகல் இலட்சார்ச்சனையும் கூட்டுப் பிரார்த்தனையும் விசேட பஜனையும் இடம் பெறவுள்ளது.

### நயினை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்கான ஏற்பாடுகள் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நயினாதீவில் ஆலயப் பின்புறத்தில் அரசாங்க அலுவலகங்கள் வழமைபோல் இயங்கி வருகின்றன. நூற்றுக்கணக்கான பொலிசாரும், விசேட பொலிசாரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

துறைமுகங்களில் தொண்டர் படையினர் தீவிரமாக சேவையிலீடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து விஷேட பஸ்சேவைகள் நடைபெறுகின்றன. குறிகாட்டுவன் துறைமுகத்தில் ஐம்பதுக்குமதிகமான படகுகள் சேவையில் ஈடுபட்டுள்ளது.

### விடுதலை

மாவிட்டபுரம், செவ்.

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாக தொடரப்பட்ட வழக்கில் ஒருவர்த்தகர் நிரபராதியாகக் காணப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார்,

மாவிட்டபுரத்திலுள்ள கடையொன்றில் மனேஜராகப் பணிபுரியும் மல்லாகத்தைச் சேர்ந்த ஜயவீரரத்திளம் என்பவர் தமது கடையில் விற்பனைக்கு வைத்திருந்த பற்பசை, பென்சில் என்பவற்றில் பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரியும்வண்ணம் விலைகளையிடாது விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆஜரானர்.

# ஈழநாடு
THE EELANADU

## மேடை அமைத்தால் விவாதிக்கத் தயார்
### ஆலாலுக்கு ஜி.. ஜி பதில்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழர்விடு தலைக்கூட்டணியிடம் வேட்பாளனக நிறுத்தும்படி கேட்ட என்னுடைய தகுதிகள் பற்றி பொதுமேடையில் விவாதிக்கத் தயாராஎன்று திரு. ஆலாலசுந்தரம் ஒரு கூட்டத்தில் கேட்டிருந்தார். அதற்குரிய மேடையையும் நானே அமைக்கவேண்டுமாம், சவால் விடுபவர்தான் மேடையமைக்க வேண்டும், அதுதான் முறை. அப்படி மேடையமைக்கும் பட்சத்தில் அவரோடு அவரது மேடையில் விவாதிக்க நான் தயார்". இவ்வாறு யாழ்ப்பாணத்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப்போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

யாழ். மத்தியூஸ் வீதியில் திரு. ஏ. பி. நாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்நாடு அமைக்கும்சர்வசன வாக்குரிமையே இந்தத் தேர்தல் என்று கூறும் கூட்டணி, தனிநாட்டைப் பெற்ற பின் எவ்விதம்நாட்டைஆளப் போகின்றது? அதற்கான செயல்திட்டம் என்ன? என்பதை சர்வசன வாக்குரிமையைக்கேட்கின்றநேரத்திலேயே மக்களுக்கு அளிக்கவேண்டும்.

"முஜிபுர் ரஹ்மான் தனது தோழர்களின் துணையோடும் இந்தியாவின்பக்கபலத்தோடும் தனிநாட்டைப் பெற்றுக்கொண்டபோதிலும் நாட்டைக்கொண்டு நடத்தும் திட்டமொன்றைக் கொண்டிராததால், பங்களாதேஷ் பசி, பட்டினி குழப்பங்களில் தத்தளித்தது. கடைசியில் முஜிபுர் ரஹ்மானேகொலைசெய்யப்பட்டார்.

நாட்டின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தமிழ்நாடு அமைக்க விரும்பும் கூட்டணியினர் ஏன் புத்தளத்தில் ஜனுப் இலியாசை நிறுத்தியும், செல்லச்சாமியை ஆதரித்துப் பிரசாரம் செய்தும், தொண்டமானை ஆதரிக்கும்படி அறிக்கையும்விடுகிறார்கள். தமிழ்ஈழத்திற்கு வெளியில் உள்ளவர்களை ஆதரிக்கின்ற கூட்டணியினர் ஏன் இலங்கை வாழ் 35லட்சம்தமிழ்மக்களினதும் சம்மதத்தைப்பெற தமிழன் வாழுகின்ற ஒவ்வொரு பகுதியிலும் வேட்பாளரை நிறுத்தவில்லை?

கொழும்பு மத்தியிலே கணிசமான அளவு இலங்கைத்தமிழர் வசிப்பதனாலேதான், கூட்டணியினர் அங்கே போய்ப்பிரசாரம் செய்கின்றார்கள். நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் அனைவருமே இந்தியத் தமிழராக இருப்பதனால் அவர்கள் தமிழ்ஈழக் கொள்கையை எதிர்ப்பவர்களாக இருப்பதனால் அங்கு போய் தங்கள் தலைவர் திரு. தொண்டமானுக்காகப் பிரசாரம் செய்யமுடியாமல் இருக்கின்றார்கள். அங்கே இவர்களைப் பிரசாரத்திற்குத் தொண்டமானும் அழைக்க மாட்டார்.

கூட்டணி என்னும் பஸ்ஸில் என்னை ஏறச் சொல்லி விட்டு பின்னால் நின்று தள்ளிவிட்டு விட்டார்கள்.

தமிழர்களது உரிமைகளுக்காக, தனிநாட்டுக்காகபோராடும் கட்சியாகிய கூட்டணியின் யாழ்ப்பாணத்தொகுதி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் என்னவிதமாக யாழ்ப்பாணத்தொகுதிச்சிங்கள வாக்காளர்களது வாக்குகளைக் கேட்கமுடியும். இதனைக் கூட்டணி அனுமதித்துஉள்ளதா?"

திரு. ஜே. ஜே. மனோகரன்

## மரண அறிவித்தல்



**செல்லத்துரை ஸ்ரீமகேசன்**
(சுன்னாகம் பட்டினசபை வாகனசாரதி)

இவர் புஸ்பரெத்தினத்தின் அன்புக்கணவரும், ஜான்சினி, ஜான்சன் ஆகியோரின் தந்தையும், திரு. திருமதி சின்னத்தம்பியின் மருமகனும், தேவி, சந்திரா, சந்திரபோஸ், ஜெயம், லிங்கேஸ்வரி, இந்திரா, குணசோதி, பாலா, யசி, ரதி ஆகியோரின் சகோதரனும், செல்லச்சாமி, கானுதீபன், சிவலிங்கம், மணியம், ரவி, யோகேஸ்வரி, விண்மதி, சந்திரா ஆகியோரின் மைத்துனரும், அச்சுவேலி பாரதி நாடகமன்ற உறுப்பினருமாகிய ஸ்ரீமகேசன் 28-6-77ல் காலமாகிவிட்டார். தகனக்கிரியை 29-6-77ல் நண்பகல் 12 மணிக்கு அச்சுவேலி வல்லை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மைத்துனர்கள்.

6560

## பயங்கர ரயில விபத்தில் 29பேர் பலி

பொன். ஜூன் 28

மேற்கு ஜெர்மனில் நடைபெற்ற பயங்கர ரயில் விபத்தொன்றில் 29பேர் பலியாகினர். என்று அறிவிக்கப்பட்டது.

10 ஆண்டுகளில் இங்கு நடைபெற்ற ரயில் விபத்துக்களில் இதுாவ மிக மோசமான விபத்து என்றும் அறிவிக்கப் பட்டது. கிழக்கு ஜெர்மன சோவியத் படைவீரர்களின் உதவியுடன் விபத்து நடைபெற்ற இடத்தில் மீட்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## தகராறு என்று—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தயாராவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு தகராறுதான் காரணம் என்று கூறப்படுவது தவறானது என்று அவர் மறுப்புத் தெரிவித்தார்.

பாண்டிச்சேரியில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

பாண்டிச்சேரியில் தமது கட்சியே ஆட்சியமைக்கும் என்பதில் இன்னமும் நம்பிக்கை உண்டென்று அவர் கூறினர்.

பாண்டிச்சேரி அ.இ.அ.தி.மு.க. சட்டசபைத் தலைவர் திரு. இராமசாமி தமது பெரும்பான்மைப்பலத்தைக் காட்டும் வகையில் ஆளுநர்முன் சட்டசபை உறுப்பினர்களை ஆஜர் செய்வதற்கு மேலும் அவகாசம் கேட்பார் என்றும் திரு. சோமசுந்தரம் சொன்னார்.

திரு. இராமசாமி இன்று சென்னையில் திரு. எம். ஜி. ஆரைச் சந்தித்துவிட்டு பாண்டிச்சேரி புறப்பட்டார்.

**மாணவர் போராட்டக்குழு மகஜர்**

இதேவேளை, தமிழ்நாடு மாணவர் போராட்டக்குழு, திரு எம். ஜி. ஆர். தகுந்த முறையில் சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தமிழ்நாடு ஆளுநர் திரு.பிரபுதாஸ் பட்வாரியிடம் கையளித்த மகஜர் ஒன்றில் குற்றஞ் சாட்டியுள்ளது.

தமது சட்டசபை உறுப்பினர்களால் சரியானமுறையில் திரு. எம். ஜி. ஆர். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படாததால் ஆளுநர் அ. இ. அ. தி மு. க. சட்டசபை உறுப்பினர்களை அழைத்துத்தாமே உண்மை நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று இம்மகஜரில் இக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. [உ]

## "யூ. என். பி. ஆட்சியில் தமிழன் ஜனுதிபதியாக வரும் வாய்ப்புண்டு!"

கிளிநொச்சி, செவ்.

தமிழ் மக்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் தற்போதைய அரசியலமைப்பை அடியோடு மாற்றியமைத்து புதிதாக நாங்கள் அமைக்கவிருக்கும் அரசியலமைப்பில் ஒரு தமிழன் கூட இந்த நாட்டு ஜனுதிபதியாக தெரிந்தெடுக்கக்கூடிய வசதிகள் இருக்கும்.

முரசுமோட்டையில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசாரக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய திரு. கனகசூரியர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு ரி. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ. தே. கட்சியே ஆட்சியமைக்கும் சூழ்நிலை இன்று உருவாகிவருகின்றது. கிளிநொச்சி தொகுதியில் செய்ய வேண்டிய ஆக்கவேலைகள் பல உண்டு. அவைகளை செய்து முடிக்க இவ்வளவு காலமும் ஒருவரும் முயற்சி எடுக்கவில்லை. இவற்றை நான் செய்யக் காத்திருக்கிறேன். ஐ. தே. கட்சியை ஆதரிப்பதன்மூலம் கிளிநொச்சியின் பொருளாதாரம் எதிர்காலத்தில் ஸ்திரப்படுத்தப்படும்.

பேசுகையில், "காந்தியும்' அண்ணவும் துப்பாக்கியும் கல்லும் தூக்கியதில்லை. அப்படியே அவர்களைப் பின்பற்றுபவர்கள் என்று சொல்பவர்களும் தூக்க வேண்டியதில்லை" என்ருர்.

ஜனுப்கள் நூர் முகமது, ஏ. அன்வர், திரு. எஸ். பஞ்சலிங்கம், ஆர். ஈ. ஆனந்தராசா ஆகியோரும் பேசினர். (கூ.இ)

பிரச்சார உத்தியோகத்தர் திரு. தவராசா பேசும்போது இந்த நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி பொருளாதார தன்னிறைவை பூர்த்தியடையச் செய்தது ஐ. தே. கட்சியே என்ருர்.

## கடந்த—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பொதுத் தேர்தலில் திரித்து பிரசாரம் செய்வதற்கு இடமளித்ததாக அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**பணிப்பு**

இம்மாதம் 20 ம்திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஆர்தர் சில்வா குழுவின் அறிக்கையை "எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுல் செய்யுமாறு அமைச்சர் இருவங்கி முகாமைத்துவங்களுக்கும் பணித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல வங்கி ஊழியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டது இலங்கை வங்கி ஊழியர் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலை நிறுத்தம் நடைபெறவிருந்தது. [உ]

## த. வி. கூட்டணி விஞ்ஞபனம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம், புத்தக வடிவில் அச்சிடப்பட்டு சகல வெளிநாட்டரசாங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## 'அம்புஸ்' தருவிக்க ஏற்பாடு

நல்லூர், செவ்.

வடபகுதியில் விவசாயப் பயிர்களை அழிக்கும் பச்சைப் புழுவை அழிக்கக்கூடிய சக்தி வாய்ந்த கிருமிநாசினியான "அம்புஸ்" மருந்தை விவசாயிகளுக்குக் கிடைக்க யாழ்ப்பாணம் 'தரோரு லிமிட்டெட், ஸ்தாபனத்தார் கொழும்பு சி. ஐ சி. லிமிட்டெட் ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்துவருகின்றனர்.

பச்சைப்புழுநோய் வடபகுதி விவசாயிகளுக்குப் பெரும் பிரச்னையாயிருந்து வருவது தெரிந்ததே.

## சித்தன்கேணியில் பொலிஸ் தாக்குதல் சம்பவங்கள்!

யாழ்ப்பாணம், புதன்

கடந்த இரு தினங்களாகச் சித்தன்கேணியில் பொலிசார் அட்டகாசம் செய்துவருகின்றனராம். வீதியில் செல்லும் பொதுமக்களைத் தாக்குவதுடன் கடைகளைப் பூட்டுமாறும் வற்புறுத்துகின்றனராம். சிவில் உடையில் துப்பாக்கியுடன் அட்டகாசம் செய்யும் இவர்கள் சங்கானைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி கடந்த சனியன்று தமது கடமையில் ஈடுபட்டிருந்த சமயம், அவர் வசிக்கும் விடுதிக்கு வந்த இனந்தெரியாத இருவர் அங்கிருந்த வேலைக்காரப் பையனைத் தாக்கிப் பயமுறுத்திப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை தகாத வார்த்தைகளால் நிந்தித்துச் சென்றதாகவும் இதனையடுத்தே இவ் வன்முறைகள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

பயங்கர ஆயுதங்களை கையில் ஏந்தி சப்இன்ஸ்பெக்டரைத் தேடிவந்த செய்தி பொலிசாருக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து நிலையப் பொறுப்பதிகாரி ஜனுப் நியால்டீன் தலைமையில் சென்ற கோஷ்டி நடவடிக்கை மேற்கொண்டது. ஆனலும் சந்தேகநபர்கள் தலைமறைவாகினர். எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதேவேளை சங்கானைப் பட்டினமே மின்ஒளியின்றி இருளில் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. இவ்வேளை வீதியால் சென்ற பாதசாரிகளும், சயிக்கிளில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த பண்ணைகத்தைச் சேர்ந்த ஒருவரும் தாக்கப்பட்டு அவருடைய சயிக்கிளும் சேதப்படுத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## இன்று

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை மகாமாரியம்மன் கோயில் தேர்த்திருவிழா இன்றுபிற்பகல் நடைபெறும். பகல் சிவத்தமிழ் செல்வி பண்டிதைதங்கம்மா அப்பாக்குட்டி அபிராமி அந்தாதி என்னும் பொருள்பற்றி விசேட சிறப்புரை நிகழ்த்துவார். அருட்கவி சி. விநாசித்தம்பியினுல் பாடப்பெற்ற வழக்கம்பரை அம்மன்பதிகம் என்றநூல் வெளியீட்டு விழாவும் இன்று நடைபெறுகிறது. (இ)

சங்கீத பூஷணம்
**செல்வி. லீலாவதி சாந்தலிங்கத்தின்**

## அந்தியேட்டி அழைப்பிதழ்



செல்வி. லீலாவதி சாந்தலிங்கம்

தோற்றம் — மறைவு
18-3-1953 3-2-1977

எங்கள் இல்லத்தின் அணையாத சுடர்விளக்கு, இதயத்தின் ஜோதி, சாந்தத்தின் திருவுருவம், பாசத்தின் பிறப்பிடம், பண்பின் சிகரம், குலத்தை ஓங்கவைக்க வந்துதித்த செல்வி. லீலாவதி சாந்தலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் 30-6-77 நாளைக்காலை 6மணிக்கு கீரிமலையில் நடைபெறும். அதன்பின் நண்பகல் 12 மணிக்கு லீலாவதியின் இல்லத்தில் வீட்டுக் கிரிகைகள் நடைபெறும். அத்தருணம் உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்ருேம்.

இங்ஙனம்
வி. கே. சாந்தலிங்கமும், குடும்பத்தினரும்.

145/3 பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம். 6561

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.